
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆடி 1985 ★ இதழ் 115







சோழப் பேரரசன் இராசராசன், தஞ்சைப் பெரிய கோயில், கருவூர்த் தேவர் போன்ற படங்கள் அலங்கரிக்கும் இந்தச் சிறப்பிதழ் உங்களுக்கே சமர்ப்பணம்.


இராசராசனின் முடிசூட்டு விழாவுக்கு இன்று ஆயிரம் ஆண்டு. பல்லாண்டு பல்லாண்டு பாடவேண்டிய பேரரசன் அவன். அவன் ஆக்கி, அகலித்து, அமைத்துத் தந்தவை யாவும் நம் முன்னோர் அளித்த செல்வங்கள். அவற்றை நாம் அநுபவித்துப் பாதுகாத்து எம் பிற்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்வது எங்கள் தலையாய கடமை.

அன்பு வணக்கம்.



## ★ இராசராசன் முடிசூடிய ஆயிரமாம் ஆண்டுச் சிறப்பிதழ் ★

உ



ஓம்கார முதலே! இடையூறுகள் வராமல் காத்தருளுபவரும், வந்தாற்களைந்து திருவருள் பாலித்தருளுபவரும், எல்லாம்வல்ல ஒருவனுய இறைவனின் ஒலிவடிவினரும், எங்கும் எல்லோரும் வழிபட எளிவந்து எழுந்தருளி இருப்பவரும் கணங்களுக்கெல்லாம் தலைவருமான கணபதி என்னும் கண்கண்ட கடவுளே! தேவரீருக்கு எங்கள் வணக்கம்.

அன்று தேவரீர் மன்னர் மன்னனுன இராசராசனுக்குத் தமிழர் சிந்தனையில் ஊறிவந்த தேவாரமாதிய திருமுறைகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தைக் காட்டியருளி, அவற்றை வெளிக்கொண்டுவரத் தோன்றுத்துணையாய் இருந்தருள் புரிந்திரே! தேவரீருக்கு எங்கள் வணக்கம்.


பள்ளிப்பாலனுய நம்பியாண்டார் நம்பியின் வஞ்சகமற்ற பிஞ்சு மனத்துப் பூசையை ஏற்று, அவர் கண்காண அவர் படைத்த திருவமுது முழுவதையும் உவந்துண்டருளினீரே. அன்புக்கு ஆட்படும் தேவரீர் எங்களுக்கும் முன்னின்று நாம் படைக்கும் எழுத்தோவியங்களும் தேவரீருக்குத் திருவுளச் சம்மதம் என உறுதுணையாய் நின்றருளுவீராக. வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

"வேக மானெறி சேரும் வினைகளும்
தாக சோகம் விடாத தளர்ச்சியும்
சோக வாரியி னுல்வருந் துன்பமும்
போக, யானை முகத்தனைப் போற்றுவாம்"

---

சிவாயநம! உலகத்துக்குக் கருத்தாவாய சிவபெருமானே! தேவரீருக்குச் சிவமயமான அருவமே திருவுருவமாயிருப்பவும், தேவரீர் அன்பர் அடியார்களின் பக்திக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் கண்டு வணங்கும் வகையில் அருவுருவமாய சிவலிங்கத் திருமேனி கொண்டருள் புரிந்தமை போதாதெனத் திருவுள்ளம் உருகி, சாங்கோபாங்கமாக இருபத்துநான்கு திருவுருவங்கள் கொண்டு விழாக்கண்டு எழுந்தருளுகின்றீரே. தேவரீரின் சோமாஸ்கந்த வடிவம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் கண்டு களிப்ப அப்பன், அன்னை, பிள்ளை என்னும் வகையில் உமாகந்தனுக வந்தருள் புரிகின்றீரே! தேவரீரின் திருவடிவப் பொலிவை இன்று ஆயிரக்கணக்கான அன்பர்கள் அடியார்கள் கண்டு தொழ நாங்களும் வணங்குகின்ருேம். இறைவா போற்றி! ஈசா போற்றி!! "ஏலவார் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும் பாலனுகிய குமரவேள் நடுவுறும் பான்மையை" வணங்குவோம்.

முன்னர் மரத்தாலும் மண்ணுலும் தேவரீருக்குத் திருக்கோயில்கள் சமைத்த தமிழர் வழியில் இடைக்காலச் சோழர் என்பார் தேவரீரை மெய்யன்போடு வணங்கித் தாமும் தம் பெண்டுகளுமாகத் தேவரீருக்குக் கருங்கற் கோயில்கள் அமைத்தார்களே. அவர்களுள் இராசராசப் பேரரசனும் அவன் தமக்கை குந்தவைப் பிராட்டியாரும், அவன் பெண்டுகளும், அவன் பாட்டி செம்பி[illegible] தேவியாரும் பெருமளவில் பொன் செலவிட்டுத் திருக்கோயில்கள் செய்வித்தார்களே! இராசராசனின் பாட்டனுர் கண்டராதித்த சோழன் சக்கரவர்த்தியாயிருந்து தேவரீருக்குத் திருவிசைப்பா பாடியருளினுரே! அவர்கள் எல்லோருடைய நினைவு இன்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் எங்கள் தமிழ்க் குழந்தைகளின் நெஞ்சில் விறைப்பாக பதியவேண்டும் என்னும் நோக்கத்தில் இதனை எழுதுகிருேம், வெளியிடுகிருேம். தேவரீர் இதனைத் தமது திருவுளச் சம்மதம் எனக்கொண்டருள் புரிதல் வேண்டும் என விண்ணப்பிக்கின்ருேம்.



"மல்லல்வளம் கனிந்த புகழ்க் கமலேசர்
திருவுருவும் வாம பாகத்து
அல்லமர்பைங் குழலுமையாள் திருவுருவும்
இருவருக்கும் அமுதமான
சொல்லயில் வேற் பசுங்குழவி திருவுருவும்
அவ்வுருவாம் குணங்கள் மூன்றின்
நல்லுரு வாதலின் அன்ருே இவரகில
காரணராய் நவில்கின்ருரே."

= குமரகுருபர சுவாமிகள்

★ வரலாறு கண்ட முதல் நிலம் தமிழ் நிலம் ★

உ
சிவமயம்




திருச்சிற்றம்பலம்

மலைமகளைப் பாக மமர்ந்தார் தாமே
வானோர் வணங்கப் படுவார் தாமே
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே
சரணென் றிருப்பார்கட் கன்பர் தாமே
பலபலவும் வேடங்க ளானார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
சிலை மலையா மூவெயிலும் அட்டார் தாமே
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம்

(திருநாவுக்கரசுநாயனார் அருளிய திருவாலங்காடு திருப்பதிக திருத்தாண்டகம்)

இமயமலையரசன் புதல்வியாய உமாதேவியாரைப் பாகத்தில் கொண்டருளியவரும், தேவர்கள் யாவரும் வணங்க எழுந்தருளியுள்ளவரும், கங்கையாய பெண்ணைத் தமது திருச்சடையில் வைத்தருளியவரும், தம்மால் எதுவும் ஆற்றாது எல்லாம் தேவரீர் செயலே என்று அறிவு, இச்சை, செயல்களற்றிருக்கும் அடியார்களுக்கு அன்பரானவரும், அன்பர்கள் அடியார்கள் பொருட்டு அவ்வப்போது செய்தருளும் அருள் வெளிப்பாட்டுக்குப் பலவிதமான திருவடிவங்களைக் கொண்டருள்பவரும், பழையனூர் என்னும் பெயர்பெற்ற திருப்பதியினைத் தலமாகக் கொண்டருளியவரும், பெரிய மலையை வில்லாக வளைத்து முப்புரத்தவர்களின் பெரிய மதில்கள் சூழ்ந்த நகரங்களை அழித்து அவர்களுக்குத் திருவருள் பாலித்த பெருஞ் செல்வராய சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம் திருவாலங்காடு. (அப்பன் இருந்திடும் ஆலங்காடே என்று காரைக்காலம்மையாரும் பாடியருளியுள்ளார் )



## திருவள்ளுவர் அருளிய திருக்குறள்
## தெரிந்து செயல் வகை
(ஆராய்ந்து செய்யும் திறம்)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்.

தக்கவர்கள் என்று தெரிந்த நண்பர் கூட்டத்தோடு கலந்து செய்யத்தக்கதை ஆராய்ந்து தாமும் நன்றாக எண்ணி ஒருகாரியத்தைச் செய்ய வல்லவர்களுக்குச் செய்வதற்கு அருமையான காரியம் யாதொன்றும் இல்லை.

**Acting with Fore - thought**

To him who takes counsel of expert friends and proceeds to do a think after proper deliberation, there is no end that is hard to achieve.

## மேற்படிப்பு வசதி

இந்தியாவில் 119 பல்கலைக் கழகங்களும், அவற்றோடு இணைந்த 1650 கல்லூரிகளும், 5 தொழில் நுட்பக் கல்லூரிகளும், 350 பொலி ரெக்நிக்ஸ்களும், 150 எஞ்ஜினியறிங் கல்லூரிகளும், 100 வைத்தியக் கல்லூரிகளும் உள்ளன.

## ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்குவர்

ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கியவர் அப்பர் அடிகள். அப்படியா? செனக்கா என்னும் மேற்கு நாட்டவர் சொன்னார் மட்பாண்டத்தை வெள்ளிப் பாத்திரம் என்றும், வெள்ளிப் பாத்திரத்தை மட்பாண்டம் என்றும் கருதுபவன் பெரியவன்.



உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு.

நாம் உள்ளத்தில் ஓங்காரமாய் எழுந்தருளியுள்ள இறைவனை உணர்ந்துகொள்வதே சிறந்த அர்ச்சனையாகும்.

★ வரலாறு என்பது ஒரு நாட்டின் வேர் ★



ஞானமண்டலம்

## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா


பிரபோ! பரமேஸ்வரா!! சிந்தனைக்கு அதீதமான தேவரீரைச் சொற்களால் வர்ணிப்பது எப்படி. மனுதீத மான பரமசத்தியமே! உன்னுடைய வியாபக சக்தியை உணருகின்றேன். மேலே உன் திருக்கரங்கள், கீழே உன் திருவடிகள், மத்தியில் பிரபஞ்சம்; இப் பிரபஞ்சத்தில் இந்தச்சரீரம் தோன்றி உலாவுகின்றது. இடறிவிழுந் தாலும் உன் திருவடியில் விழ்வேன், உயர்ந்தாலும் உன் திருக்கரத்தை அடைவேன். உமது திருவடியும் திருக்கர மும் பரம சுகமுடையன. ஆகையால் உயர்விலும் தாழ் விலும் பரமசுகமே தவிர துன்பம் என்பதில்லை. உன் அருட்பொழிவில் தோய்ந்தபின் பயம் என்பதில்லை.

கருணைவள்ளலே! அஞ்ஞானத்தால் தமக்குத் தாமே துன்பம் இழைத்துக்கொண்டிருக்கும் மனித சமுதாயத் துக்குத் தெளிந்த மெய்யுணர்வைக் கொடுப்பாயாக! அவர்களைத் தெய்வ வாசனை உடையவர்களாக்குக! ஆத்ம சுகம் என்ற அமிர்தத்தின் ஒரு துளியை என்றும் அவர் களுடைய நெஞ்சில் ஊற்றிவிடுக.

(சுவாமிகளின் வஜனமிர்தம், அலையாத இன்பம், முன்னர் படித்தவர்களுக்கு ஞானமண்டலம் பெருவிருந்து)

## மர விசேடம்

தாவரங்களுள் யூகலிப்ரஸ் என்னும் மரத்தை நம் மவர் 'சஞ்சீவி' எனத் தற்காலிகமாகப் பெயரிட்டு வரண்ட நிலமெங்கும் நாட்டும் வகையில் முயற்சியெடுத் துள்ளார்கள். மில்க்வைற் தொழிலதிபர் இதன் நாற்று மேடையையே கிளிநொச்சியில் விலைகொடுத்து வாங்கிப் பல்லாயிரக்கணக்கில் பரவலாகப் பங்கீடு செய்து பசுமை கண்டுள்ளார். இன்று பெரியாஸ்பத்திரியில் வெளி நோயாளர் தங்கிப் போகுமிடத்தில் நிழல் செய்வது அவர் நாட்டிய மரக்கூட்டம். உலகில் மிக உயரமாக வளரும் தாவரம் யூகலிப்ரஸ் என்றும் அது சில சமயம் 130 மீற்றர் உயரம் வளரும் என்றும் கூறுவர்.



## குருமொழிக் கோவை

1. நீயே உனக்கு நண்பனும் பகைவனும்.
2. பிராணனை அடக்கி ஆளுதல் வேண்டும்.
3. சுகமும் துக்கமும் இரட்டைப்பிள்ளைகள்
4. பிரமச்சரிய விரதத்தின் பெருமை பெரிது.
5. காலையிலும் மாலையிலும் தியானம் வேண்டும்.
6. பற்றின்றிக் கருமஞ் செய்தல் யோகம்.
7. நிவேதனம் செய்து சாப்பிடுதல் வேண்டும்.
8. ஓமகுண்டத்தை நினைந்து உட்கொள்ள வேண்டும்.
9. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தெய்வம்.
10. இன்பதுன்பம் முகிலைப்போல வந்து போகட்டும்.
11. தன்னை அடக்கி ஆளுதல் வேண்டும்.
12. மனத்தை இருவழிப்பட விடக்கூடாது.
13. சந்தோஷமாக இருக்கப் பழகுதல் வேண்டும்.
14. கடவுள் எல்லாவற்றையும் அறிவிப்பார்.
15. எங்களுக்குள்ளேதான் சுயராச்சியம் இருக்கிறது.
16. ஒழுக்கம் ஆன்ம வளர்ச்சிக்கு அனுசரிக்கவேண்டும்.
17. ஒருகிழமைக்கு ஒருதரம் விரதம் இருத்தல்வேண்டும்
18. என்னவந்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும்.
19. கடவுளால் ஆன்மாவை விட்டுப்பிரிந்திருக்கமுடியாது
20. உலகத்தைத் திருத்துவதிலும் நம்மைத் திருத்துவோமாக.
21. துட்டகுணங்களைப்பற்றி விழிப்பாயிருத்தல் வேண்டும்.
22. பொறுமை, தயை, அன்பு நல்ல பயிர்கள்.
23. காமம் குரோதம் முதலியன கெட்ட களைகள்.
24. அலைகிற மனத்தை அடக்கத் தேவாரம் படித்தல் ஒருவழி.
25. தேவாரத்தை நல்லாய்ப் பெலத்துப்பாடவேண்டும்.

(பாதுகாத்து உதவியவர் - மார்க்கண்டு சுவாமிகள்)


## வேப்பம் விதை


வேம்பு பழுக்கத் தொடங்கிவிட்டது. நீங்கள் வேப்பம் விதைகளை எவ்வளவு தந்தாலும் நாங்கள் விலைகொடுத்து வாங்குவோம். விதைகளை வீணாகப்போக விடாதீர்கள்.

எங்கள் விலாசம்:

மில்க்வைற்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


★ தமிழகத்தின் சமயம் சைவசித்தாந்த நெறி ★




## சுவாமி சிவானந்தர் சிந்தனைகள்

தெய்விக சாந்நித்தியம் எங்கும் நிலவுகிறது.
பெருந்தன்மை இருதயத்தை விரிவடையச் செய்கிறது.
மகிழ்ச்சியோடு இருந்தால் மேலதிக வேலை செய்யலாம்.
பணிவுடமை கர்வத்தை அழித்துவிடுகிறது.
தானம் செய்வதால் பாவங்கள் நீங்குகின்றன.
இணக்கம் இருந்தால் மற்றவர் மனதை அறியலாம்.
சத்தியமும் அகிம்சையும் தர்மத்தின் சகோதரர்கள்.
இயற்கையே இறைவனின் திவ்விய சக்தி.
உலகம் என்பது ஒரு பெரிய பரீட்சை மண்டபம்.
நல்லெண்ணத்துடன் வாழ்தல் பெருநன்மையக்கும்.
மோட்சம் என்பது மனமாசுகளின் அழிவு.
பிறப்பும் இறப்பும் வாழ்வு நாடகக் காட்சிகள்.
இறை நாமத்தால் கவலை, தொல்லை, பயம், துக்கம் நீங்குகின்றன.
அன்புள்ள இடத்தில் அமைதி நிலவுதல் உறுதி.
அன்பாகிய விளக்கை இதயத்தில் ஏற்றிக்கொள்ளுக.

## 1985 யூலை மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | போயா விடுமுறை |
| | | | வண் வீரமாகாளி தேர் |
| 2 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| 9 | செவ்வாய் | — | இரவு 7-24 அட்டமி |
| 10 | புதன் | — | அட்டமி நவமி |
| 11 | வியாழன் | — | இரவு 11-10 வரை நவமி |
| 13 | சனி | — | கார்த்திகை விரதம், ஏகாதசி |
| 14 | ஞாயிறு | — | சுவாமி சிவானந்தர் சமாதி |
| 15 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 16 | செவ்வாய் | — | ஆடிப்பிறப்பு |
| | | | தட்சிணாயன புண்ணியகாலம் |
| 17 | புதன் | — | அமாவாசை விரதம் |
| | | | இணுவில் காரைக்கால் சிவன்கொடி |
| 19 | வெள்ளி | — | சுவாமி விபுலானந்தர் தினம் |
| 20 | சனி | — | அன்னை சாரதாதேவி தினம் |
| 21 | ஞாயிறு | — | ஆடிப்பூரம் |
| 24 | புதன் | — | முன்னிரவு 6-51 அட்டமி |
| 25 | வியாழன் | — | அட்டமி நவமி |
| | | | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| 26 | வெள்ளி | — | பகல் 2 மணிவரை நவமி |
| 28 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 29 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 31 | புதன் | — | பூரணை விரதம் போயா விடுமுறை |
| | | | திலகர் நினைவு நாள் |



## பசுவின் குரல்

ஓர் ஆலயத்துக்கு வேண்டிய மேலதிக அங்கங்களுள் பூந்தோட்டம், பசுமடம், நூல் நிலையம் என்பன மிகவும் முக்கியமானவை. கோயிலுக்கு மலட்டுப் பசுக்களையும், நோயுற்ற பசுக்களையும் எவரேனும் காணிக்கையாகக் கொடுத்தாலும் கோயிலார் அவற்றைப் பொறுப்பேற்று வளர்ப்பார்கள். பசுக்கள் இறக்கும்வரை கோயில் மடத்தில் வாழும். கோயிலார் பசுக்களை இறைச்சிக் கடைக்கு விற்கும் வழக்கம் மிலேச்ச நாகரிகத்தில் இடம்பெறலாம். சைவ நாகரிகத்தில் அந்த வழக்கம் இல்லை. ஆவினுக்கு அருங்கலம் என்னும்போது பசுவின் சாணமும் மூத்திரமும் உயர்ந்த இடத்துக்குரியவை. பசு மிகப் புனிதமானது.

உலகில் உள்ள சைவ அரசு நேபாளம். அது நீ முனி என்பவரால் ஆரம்பிக்கப்பெற்றது. அந்நாட்டில் அநுமானுக்குத் திருவுருவம் உண்டு. அங்கே பசுக்கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிவபெருமானுக்குப் பசுபதி என்று திருநாமம் உண்டு, முன்னர் உமாதேவியார் பசு உருவங்கொண்டு இறைவனைப் பூசித்து அருள்பெற்றவர். பசு அவ்வளவு பெருமைமிக்கது. பசுவைப் பேணிக்காக்கும் குடும்பங்கள் சுபீட்சம் அடையும்.

## அருள் விருந்து

(ஆதாரம் – தர்மசக்கரம்)

வாழ்வு என்பது மனிதரைப் பண்படுத்தும் பாடசாலை.
எதிர்ப்பையும் வில்லங்கத்தையும் சமாளித்தல் அமைதி தரும்.
நதி கடலை நோக்குவது போல் நாம் இறைவனை நோக்குவோம்.
கண்ணும் கருத்துமாய்க் கடமையில் ஈடுபடுதல் முறை
இடையறாப் பணிவிடை பக்தியை வளர்க்கிறது
இனிமை கமழ்வது எதுவோ அது இலக்கியம்
வாழ்வதும் வாழவைப்பதும் மனித கோட்பாடு

★ கோயிலமைப்பு, வழிபாட்டு முறை தமிழர் பண்பாடு ★

# இடைக்காலச் சோழர் எழுச்சி

முன்னர் பழங்குடியினராய சேரர், சோழர், பாண்டியர் என்பார் படைப்புக்காலம் தொடக்கம் தமிழ்நாட்டை ஆண்ட மூத்தகுடியினராவர். இவர்களுள் சேரர் என்பார் ஒன்பதாம் நூற்றாண்டளவில் மலையாளம் பேசும் குடியினராக மாறியமைந்தனர். சோழர் என்பார் பல்லவர் என்னும் இனத்தவரின் அதிகாரத்தில் ஓரளவு சுதந்தர முள்ளவர்களாய் ஒதுங்கி வாழ்ந்தனர்.

ஒதுங்கி வாழ்ந்த சோழர் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விறுகொண்டெழுந்து, தங்கள் புலிக் கொடியை உயர்த்திப் பல்லவரையும் சாளுக்கியரையும் புறங்கண்டு சுதந்திரம் பெற்றுத் தஞ்சாவூரைத் தலைநகராகக்கொண்டு பேரரசை நிறுவினர்கள்.

## தார்வேந்தன் சோழனே

தண்ணீர் என்றால் காவிரி, மண் என்றால் சோழ மண்டலம், வேந்தன் என்றால் சோழன் என்று ஔவையார் பெருமைப்படுத்திப் பாடும் வகையில், சூரிய குலத் தவரும், காசிபகோத்திரரும் எனப் புகழ்பெற்றவகையில் சோழப்பெரு மன்னர்கள் வளவர், திரையர், செம்பியர், சென்னியர் என்றெல்லாம் புலவர்கள் பாடும் புகழ் மணக்க எழுந்தனர்.

அவர்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, புதுக்கோட்டை முதலிய பிரதேசங்களடங்கிய மாநிலத்தை முறையாகப் பரிபாலித்த காலத்திலே உறையூர், காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், பழையாறை முதலான பெருநகரங்களைக் காலந்தோறும் தலைநகர்களாகக்கொண்டு அரசுசெய்தனர். சிவபெருமானிடத்துப் பெரும் பக்திகொண்டு ஆத்திமாலையைச் சூடியவர்கள் இராசகேசரி, பரகேசி என்னும் பட்டங்களைப் புனைந்தவராவர்.

## விஜயாலயன் பெற்ற வெற்றிப் பெருக்கு

சோழர் மரபில் வந்த விஜயாலயன் என்பான் 846-ம் ஆண்டளவில் முத்தரையர் முதலான சிற்றரசர் பலரை ஒருவர் பின் ஒருவராகவென்று, தன் வெற்றிப்பெருக்குக்கு வீரமளித்த நிசும்பசூதனி என்னும் காளிதேவிக்கு விஜயாலய சோழீச்சரம் என்னும் அழகிய கோயிலமைத்து வணங்கினன். மார்பிலும் தோளிலும் தொண்ணூற்றாறு விழுப்புண்பெற்ற வீரன் இவன் என்பது வரலாறு. இவன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து 846 முதல் 881வரை ஆளுமையுடன் ஆண்டவன். இவனே பிற்காலச் சோழப் பேரரசை நிறுவுவதற்குக் களம் அமைத்து அத்திபாரம் இட்டவன். பல்லவர், சாளுக்கியர், முத்தரையர் என்பவர்களின் செல்வாக்கை நீக்கியவன் விஜயாலயன்.

## ஆதித்த சோழனின் அருஞ்செயல்

விஜயாலயனுக்குப் பின் அவன் மைந்தன் ஆதித்தன் என்பான் அரசனானன். இவன் 871ஆம் ஆண்டு முதலாகத் தந்தைக்கு அரச காரியங்களிலும் போர் முனைகளிலும் உதவியாயிருந்தவன். இவன் அபராஜிதன் என்னும் பல்லவனை வென்று பெருவீரன் எனப் புகழ்பெற்றவன். அபராஜிதன் என்றால் வெல்லமுடியாதவன் என்பது கருத்து. அத்தகைய வெல்லமுடியாதவனை வென்றவன் ஆதித்தன். இவன் அபராஜிதன் ஏறிவந்த யானைமீது பாய்ந்து அவனைக்கொன்ற வீரன். எனவே இவனைக் கோதண்டராமன் என்றும், தொண்டை நாடு பாவின சோழன் என்றும் வழங்குவர்.

ஆதித்தன் சோழநாட்டை அழகுபடுத்தும் காவிரி என்னும் பொன்னி ஆற்றின் இருமருங்கிலும் பெருஞ் சிவன்கோயில்களைக் கட்டியதோடு, களந்தை ஆதித்தேச்சுரம் என்னும் அழகிய கோயிலையும் அரன்பணி புரிவதற்கு அமைத்தவனுவன். இவன் இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து 871 முதல் 907 வரையும் அரசாண்டவனுவன். இவன் முதல் ஆதித்த சோழன் என வரலாற்றும் புகழ்பெற்றவனுவன்.

## பராந்தகனின் பக்திமேம்பாடு

ஆதித்த சோழனுக்குப்பின் அவன் மைந்தன் பராந்தகன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து 907-ஆம் ஆண்டு முதல் அரசாண்டான். இவன் வாணர்க்கரசன் விஜயாதித்தன் என்பவனை வென்று பெருமை பெற்றவன். இன்னும் வைதும்பர் என்பாரையும் புறம்கண்டவன் என்பது இவனுடைய புகழாரம். இவன் பாண்டியர் கொட்டத்தை அடக்கி மதுரை கொண்டான் என்னும் பட்டம் பெற்றவன். பாண்டியனுக்கு இலங்கையரசன் படைத்துணை புரிந்தும் பயனில்லாதுபோகவே, தோற்ற பாண்டியன் அரச சின்னங்களோடு இலங்கையில் புகலடைந்தான்.

பாண்டியன் அரச சின்னங்களோடு இலங்கை புகுந்ததும், சிற்றங்கொண்ட பராந்தகன் வட இலங்கையைக் கைப்பற்றினன். முன்னர் ஒரு ராமன் இலங்கையை வென்றவகையில் இவன் வெற்றியைப் புகழ்ந்த புலவர்கள் இவனுக்கு சங்கிராமராகவன் என்னும் பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினர். ''மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரிவர்மன்'' என்பது இவன் விருது.

இவன் பல சிவன்கோயில்களைக் கட்டியதோடு, சிதம்பரத்தின் ஒரு பகுதிக்குப் பொன் வேய்ந்துள்ளான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகிறது. இவன் சிதம்பரத்தில் பொன்வேய்ந்த செய்தியைத் திருவிசைப்பா வரலாற்று அடிப்படையில் அருமையாகக் கூறுகிறது. ''வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங்கொண்ட திறல் செங்கோல் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த அங்கோல் வளையார் பாடியாடும் அணி தில்லையம்பலம்.'' பராந்தகன் 907 முதல் 953 வரை நீண்டகாலம் அரசியற்றிய வேளையில் சோழப் பேரரசு விசாலிக்கத் தொடங்கியது. இன்னும் இவன் காலத்திலே தான் அலுவலர்களைத் தேர்தல்மூலம் தெரிவு செய்யும் வைபவத்தில் இரகசியச்சீட்டு மூலம் வாக்களிக்கும் முறை ஆரம்பித்தது. இந்த வழக்கத்தைக் குடவோலை முறை என்பர். குடம் – Ballot Box.

★ பண்பண்ணிய வகுப்பு தமிழிசைக்கே சிறப்பு ★

இவன் காலத்திலே திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை முதலாய சிவாலயங்கள் கற்கோயில்களாயின. இவன் துலாபாரம் புகுந்த பெரும் வள்ளல். இவனுக்கு வீரநாராயணன், வீரசோழன், பண்டிதவத்சலன், குஞ்சரமல்லன், இருமடிச்சோழன் முதலிய விருதுப்பெயர்கள் வழங்கின என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

## கண்டராதித்தரின் கடவுட்பணி

பராந்தகனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தர், அரிஞ்சயன் என்னும் மைந்தர் மூவர் இருந்தனர். அரசுரிமைக்குரிய இராசாதித்தன் அரசகாரியம் பயின்றுவந்த காலத்தில், இரண்டாம் மைந்தனாய கண்டராதித்தர் கோயிற்பணிகளை மேற்பார்வை செய்து, அவற்றிற் பெருமளவில் ஈடுபட்டு அடியாராயினர்.

இவ்வாறாக இராசாதித்தன் தக்கோலம் என்னும் ஊருக்குப் போர்புரியச் சென்றபோது, கடும்போரில் 949ஆம் ஆண்டில் வீரமரணம் எய்தினான். அவன் மறைந்ததும் கண்டராதித்தருக்கே அரசுரிமை உரியதானதும் இவர் அரண்மனைக்கு மீண்டார். இவர் 950 முதல் அரசகாரியத்தில் ஈடுபட்டுப் பழகிவந்தகாலத்தில், தந்தையார் இறந்ததும் 953 முதல் இராசகேசரி என்னும் பட்டத்துடன் அரசனானார். கண்டன் என்பதும், ஆதித்தன் என்பதும் சோழ மன்னர்களின் பாரம்பரியப் பெயர்களாகும். இவர் இவ்வாறான இருபெயர்களையும் ஒட்டி வழங்கிய பெரிய பக்தரும் புலவருமாவர். முன்னர் தந்தையாரின் சிதம்பரத்துத் திருப்பணிகளை மேற்பார்வை செய்து வந்த காலத்தில் தில்லைப்பிரானோடு மிகநெருக்கமாக அண்மையில் நின்று கும்பிட்டு அன்பு செய்து பழகி வந்த இவர், பின்னர் அரண்மனை வாசத்தால் இறைவனை நேரிற் கண்டுகூடும் அன்பினிற் கும்பிடும் வாய்ப்பில்லாது போனதை நினைந்துருகி நெஞ்சாரப்பாடிய திருவிசைப்பாப் பதிகம் ஒன்று ஒன்பதாம் திருமுறையை அலங்கரிக்கிறது.

கண்டராதித்தரின் முதல் மனைவியார் வீரநாராயணி தேவியார். இவரின் இரண்டாம் மனைவியார் மழவரையன் மகளார் செம்பியன் மாதேவியார். செம்பியன் மாதேவியார் பெரும் சிவபக்தையாய்த் திருவிசைப்பா தொகுதி வெளிவருவதற்கு அடியார்களை ஆற்றுப்படுத்தியவர். சோழகுலத்து அரசர்கள் பலரைச் சிவபக்தர்களாக உருவாக்கியவர். தாமே கோயில்கள் எடுத்தும் சிவப்பணிபுரிந்தும் நிவந்தங்கள் அளித்தும் சைவம் வளர்த்தவர்.

இராசகேசரி கண்டராதித்தர் 956ஆம் ஆண்டில் மறைந்ததும், அவர் மைந்தன் மதுராந்தகன் சிறுபிள்ளையாய் இருந்தான். எனவே, கண்டராதித்தரின் தம்பியார் அரசனானான்.

## அரிஞ்சயன் செய்த அரும்போர்
## (956 — 957)

பராந்தக சோழனின் கடைசி மைந்தனான அரிஞ்சயன் கண்டராதித்தரின் தம்பி. எதிர்பாராத விதத்தில் அரசனானபோதிலும் இவன் பெருவீரனாய் விளங்கினான். இவன் ஆட்சிக்காலத்திலே தொண்டை மண்டலத்தில் எழுந்த பெருங்குழப்பம் ஒன்றை அடக்குவதற்கு நேரிற் சென்ற இவன் போர்புரிந்தபோது ஆற்றூர் என்னும் இடத்தில் வீரமரணம் எய்தி, ''ஆற்றூர்த்துஞ்சிய தேவன்'' என்னும் சிறப்புப்பெற்றான். இவன் நினைவாக இராசராசன் வட ஆர்க்காட்டில் கோயில் கட்டியுள்ளான்.

## இரண்டாம் பராந்தகனின் இணையிலா இயல்பு

போர்மேற் சென்ற அரிஞ்சயன் இறந்ததும் அவன் மைந்தன் பராந்தகன் 957ஆம் ஆண்டில் இரண்டாம் பராந்தகன் என்னும் பட்டத்தோடு அரசனானான். சோழர்களுள் மிகுந்த அழகும் செந்நிறமும் பொருந்தியவனாகையால் இவனைச் சுந்தரசோழன் என வழங்கினர். இவன் அரசனான காலத்திலேயே இவன் மைந்தருள் மூத்தவனான ஆதித்தன் என்னும் கரிகாலன் அரசகாரியங்களில் உதவியாக இருந்தான். தந்தையும் மைந்தனும் பாண்டியரின் செருக்கையும், ஈழத்தவர் கொட்டத்தையும் அடக்கிப் பெரும்புகழ் பெற்றனர். இவர்கள் 965ஆம் ஆண்டில் எங்கள் நாட்டில் தங்கள் வீரத்தை விதைத்தனர்.

சுந்தர சோழன் பெருவீரனாதலில் மதுரையை ஆண்ட வீரபாண்டியனை சேவூர் என்னும் இடத்தில் வென்று மதுரையைக் கைப்பற்றினான். மதுரை கொண்டவன் என்றும், பாண்டியன் சுரம் இறக்கியவன் என்றும் இவனுடைய விருதுப்பெயர்கள் ஒலித்தன.

பாண்டியனுக்குப் படையுதவி செய்த இலங்கையன் நான்காம் மகிந்தன். சிங்களவரின் கொட்டத்தை அடக்கப் படைக்குத் தலைமைதாங்கியவன் கொடும்பாளூர் சிறிய வேளான் என்பவனாவன். சிங்களப்படைத் தலைவன் சேனு என்பவனாவன். இப்போரில் சோழப்படைத் தலைவன் இறந்ததாகவும், சோழர் இலங்கையைப் பிடிக்கவில்லை என்றும் சிங்களக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பின்னர் தொண்டை மண்டலத்தை வென்ற சுந்தர சோழன் அந்நாட்டைப் பரிபாலிப்பதற்குத் தன் மைந்தன் ஆதித்தனையே தலைவனாக நியமித்தான். இவன் பார்த்திவேந்திரவர்மன் என்னும் பட்டத்தோடு அதிபதியாயிருந்தான். சுந்தர சோழனுக்குக் குந்தவை என்னும் பெண்ணும் இன்னும் அருள்மொழித்தேவன் என்றொரு இளையமைந்தனும் இருந்தனர்.

இவ்வாறாகக் கண்டராதித்தரின் மைந்தன் உத்தம சோழன் என்னும் மதுராந்தகன் தக்கவயது அடைந்து சோழநாட்டு அரசுரிமை தனக்கே உரியது என்றும், தான் முன்னர் சிறு குழந்தையாயிருந்தமையால் அவ்வுரிமை தன் சிற்றப்பனுக்குச் சென்றதென்றும் தன்கருத்தை வெளியிட்டிருந்தான். இதையடுத்துத் தொண்டை நாட்டில் உண்டான சதி ஆதித்த கரிகாலனின் உயிரை 969இல் குடித்தது. தன் அருமை மைந்தன் இறந்த செய்திகேட்ட சுந்தரசோழன் மனமுடைந்து நோயுற்று அதே ஆண்டில் இறந்தான். அவன் மனைவியருள் வானவன் மாதேவியாரும் உடன் கட்டை ஏறினர்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

★ மருத்துவத்தில் நாடித்திட்பம் சித்தர் கண்டவை ★

## அறிந்து கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| பூர்ணபலம் | — | தேங்காய் |
| சதாபலம் | — | எலுமிச்சங்காய் |
| அக்கிரஜன் | — | முதலிற் பிறந்தவன் |
| அநுஜன் | — | பின்னர் பிறந்தவன் |
| சங்கம் | — | லட்சம் கோடி |
| வாசாமகோசம் | — | வாக்குக்கு எட்டாதது |
| சிரேஷ்டன் | — | தலைமையானவன் |
| சியேட்டன் | — | முதலில் வந்தவன் |
| கனிஷ்டன் | — | இளையவன் |
| பிக்காரி | — | வறியவன் |
| பிசி | — | விடுகதை |
| பிரமோதம் | — | பெருமகிழ்ச்சி |
| பிராகாரம் | — | கோயில் வீதி |
| பிராசீனம் | — | பழையது |
| பிராதா | — | சகோதரன் |
| பிறங்கடை | — | வழித்தோன்றல் |
| பிருண்டு | — | பிற இடம் |
| பிற்றைநிலை | — | வழிபாட்டு நிலை |
| புட்கரிணி | — | கோயிற்கேணி |
| புட்பகாசம் | — | விமானக்கோயில் |
| புண்ணியாக வாசனம் | — | தூய்மைச்சடங்கு |
| புத்தி பூர்வம் | — | மனம் அறிந்தது |
| புரியட்டகம் | — | சூக்கும சரீரம் |
| புரோதாயம் | — | தூய்மைக்குளிப்பு |
| புலிங்கம் | — | தீப்பொறி |



## விவேகாநந்த வெள்ளம்

### சமய வாழ்வும் தொண்டும்

இந்தியாவின் தேசிய வாழ்க்கை என்னும் சங்கீதத்துக்குச் சமயம் சுருதிபோல உள்ளது. சமயத்தைப் புறக்கணித்தால் வாழ்வு தழைக்கமாட்டாது. தொண்டு செய்தல் இந்தியாவின் தேசீய இலட்சியம்.

### மனவொற்றுமை

சமூக வாழ்வின் இலட்சியம் ஒருமனப்படுதலேயாம். சிதறிக்கிடக்கும் மனோசக்திகளை ஓரிடத்தில் சேர்த்து, ஒருமுகப்படுத்தி, பிரயோசனப்படுத்தும் முறையில் பிரயோகித்தலே வெற்றியின் இரகசியம். சீனன் ஒவ்வொருவனும் தனித்தனி சிந்தித்தவன். யப்பானியர் கூட்டாகச் சிந்தித்தவர்.

### பொறுமை

நம் நாட்டைப் பிடித்த பெரிய சனியன் பொறுமை. அது எல்லோருக்கும் பெரிய சனியனாய் இருந்து வந்தது. பொறுமையை ஒழித்தால், இன்னும் செய்யவேண்டிய கருமங்களை நன்றாகச் செய்யலாம். அதற்கான அற்புத ஆற்றலையும் பெறலாம்.

நாம் முதலில் ஆராதிக்கவேண்டிய தெய்வங்கள் நமது மக்களேயாவர். ஒருவரோடு ஒருவர் பொறுமை கொண்டு, ஒருவரோடு ஒருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரை ஒருவர் பூசிப்போமாக.

## தமிழாற் சிறப்புப்பெற்ற சில இடங்கள்

தமிழ் கூறும் நல்லுலகம்
வீங்கு நீர் அருவி வேங்கடம்
தேன் சொரியும் கொல்லி
தென்றல் வளரும் பொதியில்
தண் கானற் கோடை
பொரு கடல் ஈழம்
காவிரி தென்பெண்ணை பாலாறு
வைகை பொருநை
கருமுகில் தவழும் பெருமதிற் கருவூர்
கல்வியிற் கரையிலாத காஞ்சி
அறந்துஞ்சு உறந்தை
பெரும்புனல் அலைக்கும் வஞ்சி
பொருள் மலி புகார்
முத்துபடும் பொற்கை
பைந்தமிழ் மதுரை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

### அருள் விருந்து....

நல்ல எண்ணம் மனிதனை மேலுக்கு உயர்த்துகிறது
அவரவர் வினையின் விளைவே உயிர் வாழ்க்கையாகிறது
மனம் திருந்தாதவனுக்குத் தன்காரியமே தொல்லையாகிறது.
மௌனம் கோபத்தைத் தணிப்பதற்கு உபாயமாகிறது
தியானம் செய்பவனுக்கு உலக சந்தடிகள் கேளா
எண்ணம் தூய்மையானல் சொல்லும் செயலும் தூய்மை பெறும்
இறைவன் செயலை உணர்ந்தவன் இறுமாப்பு அடையான்
சோம்பலுற்றுக்கிடப்பது பாபங்களுள் பெரும் பாபம்
அகத்தூய்மையும் ஆத்மஞானமும் இணைபிரியாதவை
தன்னடக்கம் உண்டாகத் தூய்மைகள் நீங்கிவிடும்
மனநோயை மாற்றவல்லவர் அருளாளரே
மனவுறுதியில்லாதவன் செயலும் உறுதியில்லாதது
ஆசையைக் குறைப்பது பெருந் தேட்டமாகும்

★ தென்னாசிய நாடெங்கும் நிலவுவது தமிழ்ப் பண்பு ★

## சைவம் உங்களுக்குத் தெரியுமா?

1 ஆறு உருத்திராக்கங்கள் சேர்ந்து வட்டமாகவமைத்த காதணி
2 மணியிழைத்து வட்டமாகச் செய்த காதணி
3 சிவபெருமானை மனத்தால் போற்றுதல்
4 சிவபெருமானை வாயால் போற்றிப்பாடுதல்
5 சைவ சமயத்தில் முதற்சாதனம் என்பது
6 பழைய அரசர்களின் உள்மந்திரிமார்
7 பஞ்சபூதங்களுள் ஆகாயத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள்
8 பரமுத்தி, மீளாநிலை, பேராவியற்கை என்பதன் பொருள்
9 மண்ணுலகில் வாழ்வாரை மனத்தூயவராக்குவது
10 வேதமும் ஆகமமும் பொருள் ஒற்றுமை உடையவை என்றவர்
11 புகழையும் பொருளையும் விரும்பாத அன்பு
12 ஈழநாட்டுக்குள்ளாக ஓடும் நாடி
13 ஒன்று கூறவே ஏனையவை அடங்கும் என்பது
14 ஆன்மாவைப் பரமான்மா எனவுரைப்பவன்
15 அறிவுடைப்பொருள் எனப்பட்டது
16 அறிவில்லாப் பொருள் யாவும்
17 எங்கும் உள்ள இறைவன்
18 மூன்று பொருள்களின் கூட்டம் என்பது

1 குண்டலம் 2 குழை 3 மானசம் 4 வாசகம் 5 திருநீறு 6 அமாத்தியர் 7 பௌத்தர், சமணர் 8 திருவடிப்பேறு 9. தேவாரம் 10. நீலகண்ட சிவாசாரியார் 11 பேரன்பு 12 இடைநாடி 13 உபலட்சணை 14 ஏகான்மவாதி 15 சித்து 16 அசித்து 17 ஈஸ்வரன் 18 உலகு

## கேள்விப் பழமொழிகள்

21 மலைவிழுந்தால் மண்ணுங்கட்டி தாங்குமா?
22 மனோவியாதிக்கு மருந்து ஏது?
23 ஆனைகேட்ட வாயால் ஆடுகேட்கவா?
24 வாய் புளித்ததோ? மாங்காய் புளித்ததோ?
25 விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் ஏன்?
26 வாழப் பொறுதவன் ஆளப் பொறுப்பானு?
27 வேந்தன் சீறின் ஆந்துணை ஏது?
28 அன்று எழுதினவன் அழித்து எழுதுவானு?
29 உள்ளங்கைப் புண்ணுக்கு கண்ணுடி ஏன்?
30 எலி அழுதால் பூனை சும்மா விடுமா?
31 எள்ளுச் செடி பிடுங்க ஏலேலப் பாட்டு ஏன்?
32 ஐயர் வரும்வரை அமாவாசை நிற்குமா?
33 கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் ஏன்?
34 கரிவிற்ற காசு கறுப்பாயிருக்குமா?
35 கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்குவதா?
36 கள்ளிச் செடிக்கு முள்வேலி ஏன்?
37 கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?
38 கொசுவுக்கு அஞ்சிக் குடிபெயர்வதா?
39 சந்தியிலே அடித்ததற்குச் சாட்சி வேண்டுமா?
40 செடியிலே வளையாதது மரத்திலே வளையுமா?

## தமிழில் வழங்கப்படும் தெலுங்குச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 129 | நிம்மதி | — | கவலையின்மை |
| 130 | பகடி | ... | விகடம் |
| 131 | பகடை | — | சூதாட்டக் கருவி |
| 132 | பச்சவடம் | ... | சீலை |
| 133 | படாடோபம் | ... | உடைப்பகட்டு |
| 134 | பண்டவாளம் | — | உரிமைக்குணம் |
| 135 | பண்டிகை | ... | பெருநாள் |
| 136 | பந்தயம் | ... | பணயப்பொருள் |
| 137 | பந்தி | ... | விருந்தினர் நிரை |
| 138 | பராமரி | ... | ஆதரி |
| 139 | பவிசு | ... | கௌரவம் |
| 140 | பளு | ... | சுமை |
| 141 | பாகை | ... | தலைப்பா |
| 142 | பாச்சிகை | ... | சூதாடுங்கருவி |
| 143 | பாராபத்தியம் | ... | மேல்விசாரணை |
| 144 | பாரம் | ... | சுமை |
| 145 | பித்தலாட்டம் | ... | மாறுகக் கருதல் |
| 146 | பீலி | ... | மாதர் காதணி |
| 147 | புடலி | ... | புடோல் |
| 148 | புருடா | ... | பொய் |
| 149 | பொக்கை | ... | பல்லில்லா வாய் |
| 150 | பொட்டலம் | ... | சிறிய பொதி |

## அவிழ்த்துப் பாருங்கள்

1. அத்தைவீட்டுத் தோட்டத்திலே ஆடி அசையுது பாம்பு
2. இறந்துபோனவன் ஊரெல்லாம் போகிறுன்
3. அம்மா சப்பாணி அவள் மகள் இழுப்பாணி
4. எவரும் ஏறு மரத்திலே இளையதம்பி ஏறுகிறுன்
5. காய்ந்த கொப்பிலே கறுத்தப்பூ
6. இவ்வளவு ஆள் அவ்வளவு சுமக்கிறுன்
7. ஐந்துபேருக்கு இளையவன் முந்திக் கலியாணம் முடிக்கிறுன்
8. ஒரு கிணறுக்கு ஒரு மீன்
9. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி
10. ஓங்கி வளர்ந்த மரம் ஒருபிடி இலையில்லை
11. கட்டுப்பட்டவளை விட்டுப்பிரிந்தவள் குப்பைச் கிடங்கில்
12. பொரித்த முட்டை நடக்கிறது
13. கட்டைப் பெண்ணுக்குப் பட்டுப்புடைவை
14. கொக்கு நிற்கக் குளம் வற்றுகிறது
15. காட்டுக் கறுப்பர்கள் கயிறு திரிக்கிறுர்கள்
16. கள்ளத்தவசி வெள்ளையுடையில் தவஞ் செய்கிறுன்
17. செம்பு நிறைய சிவப்புக்கல்

1. புடலங்காய். 2. கருவாடு. 3. அம்மி, குழவி 4. பேன். 5. குடை. 6. அடுப்பு. 7. சின்னிவிரல் 8. நாக்கு. 9. நிலக்கடலை. 10. கற்றுளை. 11. உமி 12. கோழிக்குஞ்சு. 13. வெங்காயம். 14. விளக்குத்திரி 15. எறும்பின் வரிசை. 16. கொக்கு. 17. மாதுளம்பழம்.

★ சிந்துவெளியில் திட்டமிட்ட நகரமைப்பு அமைந்தது ✱

(6ம் பக்கத் தொடர்ச்சி)

## இடைக்கால........

## உத்தம சோழன் உயர்வு

சுந்தரசோழன் இறந்ததும் அவனுடைய இரண்டாம் மைந்தன் அருண்மொழித் தேவனுக்கே ஆட்சியுரிமை என்று பொதுமக்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் குரலை அமைதியாகக் கேட்ட அருண்மொழித்தேவன், தன்னுரிமையைத் தன் சிறியதந்தை முறையில் உறவினனை உத்தமசோழனுக்கே வழங்கி, அவனே அரசனாதல் வேண்டும் என்றும், அவனுக்குப் பின்னர் ஆளும் உரிமை தனக்காகலாம் என்றும், சமாதானம் கூறி உடன்படிக்கை செய்து கொண்டான்.

இவ்வித நீதிவழுவாநெறி முறையில் உத்தமசோழன் 970 இல் அரசனானான். அருள்மொழித் தேவன் அரண்மனை அலுவல்களில் அன்புடன் உதவி செய்து அதிகாரமுள்ள இளவரசனாயிருந்து சைவம் வளர்ப்பதிலும் படிப்பதிலும் வெகுவாக ஈடுபட்டிருந்தான். உத்தமசோழன் பதினைந்து ஆண்டுகள் அரசாண்டான். அவன் காலத்தில் புலியுருவம் பொறித்த பொன் நாணகம் வெளிவந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

## இராசகேசரி இராசராசசோழன்

### ( 985 .... 1014)

உத்தமசோழன் 985 இல் இறந்ததும் உரிமை வாயிலாகவும் உடன்படிக்கை வாயிலாகவும் ஆளும் அதிகாரம் அருள்மொழித் தேவனுக்கே உரியதாயிற்று. முப்பதாம் ஆண்டளவில் தன் ஆளும் உரிமையைப் பெருந்தன்மையோடு சிற்றப்பனுக்கு விட்டுக் கொடுத்துப் பதினைந்து ஆண்டுக்காலம் அரசகாரியம் பழகி முதிர்ந்த அனுபவத்தொடு அருண்மொழித் தேவன் முடிசூடினான். சோழரிடையில் எழுந்த பெரிய சிக்கலைச் சுமுகமாகத் தீர்த்து வைத்த பெருந்தன்மை வாய்ந்தவன் அருள்மொழித் தேவன்.

அருள்மொழித் தேவன் என்னும் பெயரோடு அரசனான அவன், பகையரசர்களை வென்றபின் இராசாக்களுக்கு இராசா என்னும் கருத்தில் இராசராசனாயினான். அவன் வரலாறு கண்டிராத பேரரசன். இராசகேசரி என்னும் பட்டம் புனைந்தவன்.

உத்தமசோழனின் தாயார் செம்பியன்மாதேவியார் கண்டராதித்த சோழரின் மனைவி. அவர்தம் பேரனாய இராசராசனிடத்தில் பேரன்பு பூண்டொழுகி அவனைச் சிவபக்தனாக உருவாக்கி விட்டவர். இராசராசனின் அன்புத் தமக்கையார் குந்தவைப்பிராட்டியாரும் அவர் கணவன் வந்தியத்தேவனும் இராசராசனிடம் அன்பு நிறைந்தவர்கள்.

இராசராசன் ஐப்பசிமாதத்துச் சதய நாளில் தோன்றியவன் நல்ல முறையில் வளர்ந்து நற்பண்புகள் மிகுந்து, நாட்டவர் அன்பினை அதிகமாகப்பெற்று, "சைவம் வளர்க்கும் தண்முகில், திருமுறைபோற்றும் செவிலி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசை படரும் கொழுகொம்பு" என்று பெரியவர்சள் புகழப் பெரியவனாயே பணிபுரிந்தவன்.

இராசராசன் இளவரசனாக முடிசூடப்பெற்று உத்தமசோழனின் கீழ் பதினைந்தாண்டு அரசகாரியஞ் செய்தபின், பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பதினைந்து ஆண்டுகளும், பதினோராம் நூற்றாண்டின் முதற் பதினான்கு ஆண்டுகளும் அரசனாய்ப் பேரரசனாயிருந்தவன். அவன் நாற்பத்தைந்தாண்டுகள் அரசகாரியஞ் செய்த அரசன், அறிஞன், அறநெறியாளன்.

முன்னர் அரசர் தம் பெருமையும், அவர்கள் செய்த பணியும், அவர்கள் பெற்ற புகழும் பேறும், கல்வெட்டுகளில் வெளிவந்தனவாயினும், இராசராசன் காலத்தில் அவன் உத்தரவின் வழி மெய்க்கீர்த்தி என்னும் புதுமுறை நடைமுறைக்குவந்தது. மெய்க்கீர்த்தியில் அரசனின் வரலாறும் பணிகளும் விளக்கமாகப் பொறிக்கப்பட்டன. அவை இன்பத்தமிழில் அகவற்பாவில் அருமையாக வெளிவந்தன. இவ்வழக்கம் தமிழ்நாட்டுக்குத் தனிப்பெருமை தந்தது.

## பெருவீரன் பேரரசன்

இராசராசன் சைவத்துறையிலும் தமிழ்த் துறையிலும் பெரும் புலவனாயிருந்தவாறே போர்ப் பயிற்சியிலும் பெருவீரனாயிருந்தான். மேற்குப்பக்கத்தில் சேர மன்னன் பாஸ்கர இரவிவர்மன் காந்தளூர் என்னும் இடத்தை நன்றாக அரண்செய்து செருக்குற்றிருந்தான். அவன் ஒரு சமயம் இராசராசன் அனுப்பிய தூதனை அவமானப் படுத்திச் சிறையிட்டிருந்தான். இதையறிந்த இராசராசன் படையெடுத்துச் சென்று வலிய கோட்டையாய காந்தளூர்ச்சாலையை அழித்து, அவனுடைய கப்பற்படையையும் சிதைத்துப்பெருவெற்றியீட்டினான். இவ்விதம் 'காந்தளூர்ச் சாலைக்கலம் அறுத்த' நிகழ்ச்சி 988 ஆம் ஆண்டாக இருக்கலாம் என்பர்.

முன்னர் சோழரால் செருக்கடக்கப்பட்ட பாண்டியர் அமரபுஜங்கன் என்பானின் தலைமையில் வீரம் காட்டத் தொடங்கவே, இராசராசன் அவனை வென்று அடக்கித் தென்ன பராக்கிரமன் என்னும் விருதுப் பெயர்பெற்றான்.

பின்னர் குடமலை என்னும் குடகுமலைப் பகுதியையும் வென்று, நுளம்பபாடி என்னும் பெரும் பிரதேசத்தையும் வென்றான். நுளம்பபாடி என்பது சேலம், வட ஆர்க்காடு, பெல்லாரி, கோலார், தும்கூர் மாவட்டங்களைக் கொண்டது. இதைத்தொடர்ந்து கங்கைவாடி, தடிகைபாடி முதலிய மைசூர்ப்பகுதிகளையும் வென்று அங்கே இராசராசபுரம் அமைத்தான்.

பின்னர் முன்னர் பாண்டியர்களுக்கு உதவியாக நின்று சோழரிடம் தோற்று உருகுணையில் ஒதுங்கிவாழ்ந்த சிங்களவர் அங்கிருந்தவாறே செருக்கடைந்தபோது, சோழப்படையினர் பொலனறுவை வரை சென்று வெற்றி கொண்டு அந்த இடத்தை சனநாதமங்கலம் என வழங்கினர். சனநாதன் என்பது இராசராசன் பெற்ற விருதுப் பெயர்களில் ஒன்று. பொதுமக்களால் விரும்பப்பெற்ற பெரியவன் என்பது கருத்து. அநுராதபுரம் முற்றாகப் பொலிவிழந்து உருக்குலைந்தது. பொலனறுவைக்கு இப்பால் மும்முடிச் சோழமண்டலம் என்னும் பெயர்பெற்ற பெரும் பிரதேசம் சோழவரசின் ஒரு மாகாணம் போல அமைவதாயிற்று.

★ வேதநெறி சைவத்துறையால் விழுமம்பெற்றது ★

பின்னர் நிகழ்ந்த சாளுக்கியப் போரில் துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள பெரு நிலத்தைக் கைப்பற்றி யமை வரலாற்றுப்புகழாயிற்று. அதன்பின் வேங்கி நாட்டில் உண்டான உள்நாட்டுக் கலசப்போரில் இராச ராசனிடம் சரண்புகுந்த சத்திவர்மனே அரசனுக்குவதற்கு சோழர் படை வேங்கி நாட்டைத் தாக்கியது.

இராசராசன் விரும்பிய வண்ணம் சத்திவர்மன் அரசனுகவும் அவன் தம்பி விமாலாதித்தன் இளவரசனு கவும் வேங்கி நாட்டின் முடிசூட்டப் பெற்றுர்கள். வேங்கி நாட்டாரின் பணிவும் விசுவாசமும் இராசராசன் உள் ளத்தைத் தொட்டதாலும் அவன் பெரிய இராசதந்தரி யாதலாலும் இராசராசன் தன் மகள் குந்தவை என்பாளை இளவரசன் விமலாதித்தனுக்குத் திருமணஞ் செய்து வைத்தான்.

இலங்கைக்கு மேற்குப் பக்கத்தில் இன்று மாலைதீவு என்று புகழ்பெற்று நிலவும் தீவுக்கூட்டங்கள் அந்நாளில் "முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்'' என வழங்கின. முந் நீர் என்பது கடல். அது ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்று நீர் என்பனவால் நிரம்பியது.

சேரனின் கப்பற்படையைச் சிதைத்தும், மாலைதீவு களை வென்றும் பெருமை பெற்றது இராசராசனின் கடற் படை. தமிழன் செலுத்திய கப்பல்கள் நடுக்கடலுக்கூடாக வும் சென்றன. இத்தகைய கப்பல்களே பின்னர் இராச ராசனின் மைந்தன் இராசேந்திரன் தெற்காசிய நாடு களில் செல்வாக்குப் பெறுவதற்கு உதவியாயிருந்தன.

இவ்வாருகவும் இன்னும் பல்வேறுவகைகளாலும் இராசராசன் பெற்ற வெற்றிகளையும், ஈட்டிய புகழையும் அவனுடைய மெய்க்கீர்த்திகள் பலவும் குறிப்பிடுகின்றன. அவனுக்குரிய தனிப்பெருமைகளை முதலிற் குறித்தே மெய்க்கீர்த்தி தொடங்குவது வழக்கம். தொடக்கத்தைக் கொண்டே அது அவனுடையது என இலகுவாக நிர்ண யிக்கலாம்.

ஸ்வஸ்திஸ்ரீ...

திருமகள் போலப் பெரு நிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் தடிகை பாடி யும் நுளம்ப பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங் கமும் எண்திசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திரள்திறல் வென்றித் தண்டால் கொண்ட தன் எழிர்வளர் ஊழியுள் எல்லாயாண்டும் தொழுதகவிளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் கோராசகேசரி பன்மரான ஸ்ரீ ராஜ ராஜ தேவர்—தஞ் சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத் திருமஞ்சனசாலை தானஞ்செய்தருளாவிருந்து பாண்டிய குலாசனி வளநாட்டு தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜ ராஜீச்வரமுடை யார்க்கு நாம் குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்தில் கல்விலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டின... யாண்டு... இருபத்தைஞ் சாவது.

## இராசராச சோழனின் திருமுறைப்பற்று

இராசராசப் பேரரசனுக்குப் பாட்டியார் செம்பியன் மாதேவியாரும், தமக்கையார் குந்தவைப் பிராட்டியாரும் உண்டாக்கிய திருமுறைப்பற்று ஆழமானது, உறுதி யானது. இத்தகைய பற்றினுல் அவன் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர் ஆகிய தேவாரமுதலிகள் மூவரிடத்தும் பெரும் பக்திபூண்டொழுகியதோடு, அவர்களுக்குத் திருவுருவங் கள் செய்வித்துப் பெருவிழாவும் செய்வித்துவந்தான். தேவாரம் முதலாகத் தான்அரிதில்தேடிக்கண்ட திருமுறை ஏடுகளைச் சுத்தம் செய்து, நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு முறைசெய்து தொகுத்துப் பண்ணடைவும் செய்து, பக்குவமாகப் பேணிப் பாதுகாக்க வசதிசெய் தான்.

தான் பெருமளவில் பொன்செலவிட்டுக் கட்டுவித்த தஞ்சைப் பெருங்கோயிலில் பூசைகள் விழாக்களின்போது பாடுவதற்கு ஓதுவார்கள் என்னும் பிடாரர்கள் நாற்பத் தெட்டு ஒழுக்கசீலர்களையும், உடுக்கை, மத்தளம் கொட்டு வதற்கு இசைவல்லார் இருவரையும் நியமித்து அவர்கள் திருப்பதியம் விண்ணப்பித்தற்கு அவர்களுக்குப் பெருமள வில் வசதிகளும் செய்து கொடுத்து அவர்களுக்கு ஆடவல் லான் என்னும் அளவையால் நெல்லளந்து கொடுக்கவும் வழிவகுத்தான். திருப்பதியம் என்னும் தேவாரம் அரு ளிப்பாடுவதற்கு வேண்டுவன விதித்து எழுதிய கல்வெட்டு பதினைந்து பந்திகளைக் கொண்டதாகும். அது தஞ்சைப் பெருங்கோயிலின் வடக்குச் சுற்றுப்புறச் சுவரின் வெளிப் பக்கத்திற் பதிக்கப்பெற்றுள்ளது.

திருப்பதியம் விண்ணப்பிப்போர் யோக்கியராய் ஒழுக்கசீலர்களாய் இருத்தல்வேண்டும் என்பது வற்புறுத் தப்பட்டிருந்தது. ஓதுவாமூர்த்திகளெனப் பெருமதிப்புப் பெற்றிருந்த அவர்களின் திருநாமங்கள் சிவமயமாகவே இருந்தன. பல்வேறுவகையிலமைந்த பிள்ளைத்திருநாமங் கள் வழக்கொழிய, அவர்கள் எல்லோரும் சிவமயமான திருநாமங்களையே பூண்டொழுகினர்.

அவர்களின் திருநாமங்களை அறைவதானுல் சதா சிவன், ஞானசிவன், மனோதமசிவன், இருதயசிவன், வாம சிவன், தர்மசிவன், ஓங்கார சிவன், சத்தியசிவன், அதிகார சிவன், விஞ்ஞான சிவன், அகோரசிவன், அம்பலத்தாடி, எடுத்தபாதம், தில்லைக்கூத்தன் முதலாக நிலவியனவாம். அவர்கள் ஊராரறிய மன்னரறிய உத்தமர்களாய்வாழ்ந்த பெரியார்களாவர்.

## இராசராசன் செய்த சைவப்பணி

இராசராசனின் சைவப்பணியில் சிவப்பணிக்குச் சிகரம் வைத்தாற்போலமைந்தது அவன் ஆறுண்டுகள் ஆயிரக்கணக்கான தொழிலாளரைக் கொண்டமைத்த தஞ்சைப் பெருங்கோயிலாகும். அது பிரகதீஸ்வராலயம் எனவும் இராசராசேச்சுரம் எனவும் வழங்கும் அதி அற் புத கலைக்கோயிலாகும்.

அழகுக்கலைகள் களிநடம் புரியும் இந்த அற்புதக் கோயிலில் அவன் எழுந்தருளுவித்த அற்புதத் திருக் கோலங்கள் பல அங்கே அழகொழுகும் கடவுளர் திரு

மேனிகளையும் நாயன்மார் திருவுருவங்களையும் அவன் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டமைத்தான். கடவுளர் திருமேனிகளுக்கு அவன் செய்வித்த விலையுயர்ந்த ஆபரணங்கள் பல பொன் கொண்டிழைத்து மணிகொண்டு பதித்தனவாகும்.

இத்திருக்கோயிற் பூசைகள் முட்டின்றி நடைபெறுவதற்கு, அவன் கொடுத்த தருமங்கள் மிகப்பலவாகும். செப்பேடுகளில் கூறும்வகையில் அவன் கூற்றாக அமைந்த வாசகம், ''நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும்'' எனஎழுதப்பெற்றுள்ளன. தனக்குப்பின் தன் அன்புத்தமக்கையார் குந்தவை தேவியார் கொடுத்தவற்றை அக்கன் குடுத்தன என எழுதிய பின்னரே, தன் மனைவியர் கொடுத்தனவற்றை நம் பெண்டுகள் குடுத்தனவும் என எழுதுவித்தான்.

இன்னும் இவர்களைப் பின்பற்றி அரச ஊழியர்கள் பலரும் அள்ளியள்ளிக் கொடுத்தவை மிகப்பலவாகும். அக்கோயிற் காரியங்கள் செய்வதற்கும் பணியாற்றுவதற்கும் இசை நாடகம்போன்ற கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்கும் நானூற்றுவரைக் குடியேற்றி அவர்கள் வாழ வீடுகளும் அவர்கள் வாழ்க்கை வருமானத்துக்கு விளை நிலங்களும் கொடுத்துள்ளான்.

இத்திருக்கோயிலில் நித்தியம் என்னும் நாள் வழிபாட்டுக்கும், திங்கள் என்னும் மாத வழிபாட்டுக்கும், நைமித்திகம் என்னும் சிறப்புவழிபாட்டுக்கும் ஏற்படுத்திய நிவந்தங்கள் பலவகையான அணிகலன்களும், பாத்திரங்களும் விளை நிலங்களும் கிராமங்களும் அதிக விலையுள்ளனவாகும்.

இறைவன் ஆடியருளும் திருமஞ்சன நீரிற்போட சண்பகமொட்டு, ஏலவரிசி, இலாமிச்சைவேர் முதலியன அளித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. கோயிற்றிருவுருவங்களை அலங்கரித்து அழகுபடுத்துவதற்கேற்ற ஆபரண வரிசையில் வைரம், முத்து, மணிகள் இழைத்த அணிகலன்களும் இருந்தன. இன்னும் காளங்கள், திருப்பள்ளி தொங்கல், தவளச்சத்திரம், திருக்கொற்றக்குடை, ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி முதலியனவும் இருந்தன.

இன்னும் திருமுடி, வீரப்பட்டம், உதரபந்தனம், திருவடிக்காரை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பைத்தகடு, இராஜாவர்த்தம், திரள்மணிவடம், ஸ்ரீசந்தம் முதலிய ஆபரணங்களும் இருந்தன. இவற்றைவிட வருகவாளி, ஏகாவலி, முத்தின் கடகம், திருக்கால் வடம் முதலிய முத்தணிகளும்; கண்டநாண் பாசமாலை, வாகுவலயம், இரத்தினமோதிரம் முதலிய நவரத்தினாபரணங்களும் இருந்தன.

இனிக் கோயில்களில் பகலும் இரவும் இடையீடின்றி எரியும் நுந்தாவிளக்குகளும், வழிபாட்டு நேரங்களில் ஏற்றப்பெறும் சந்தி விளக்குகளும், வெள்ளிக்கலங்களும், செப்புக்கலங்களும் இருந்தன.

## இராசராசன் செய்த தர்மப்பணி

இராசராசன்செய்த பலவகைப் பணிகளுள் சமூகத்துக்குப் பெருநன்மை பயத்த தர்மப் பணிகளும் ஒருசில வாகும். பேரரசன் பேரால் பிறர் வெட்டி உதவிய கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் இறைப்பவனுக்குப் போதியளவு நெல் நாள்தோறும் கொடுக்கப்பெற்றது. இன்னும் மட்பாண்டங்கள் செய்து இடுவோனுக்கு மாதந்தோறும் நெல் கொடுக்கப்பெற்றது. கிணற்றுக்கும் தொட்டிக்கும் பழுது திருத்துவோனுக்கு அவ்வப்போது நெல் கொடுக்கப்பெற்றது. மேலே சொன்ன கிணறு தோண்டியவன் பெயர் தஞ்சாவூர் பாவநாசவூர்ப் பணிமகன் கண்ணன் ஆரூரன் என்பவனாவன்.

## அடியார் பலரின் அறப்பணிகள்

தஞ்சைப் பெருங்கோயிலில் சர்வசிவ பண்டிதரின் பூசைக்கிரமத்தையும், இராசராசனின் ஆட்சித்திறமையையும் அனுபவத்திற் கண்டறிந்த பெரியவர் பொய்கை நாட்டு ஆதித்த சூரியன் என்பவராவர். அவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, பரவையார் முதலான திருவுருவங்களைச் செம்பால் செய்வித்தும் தமது பெருமதிப்புக்குரிய இராசராசன், அவன் தேவி உலோகமாதேவி ஆகியோருக்கும் செப்புத்திருமேனி செய்வித்தும், சந்திரசேகர மூர்த்தத்துக்குப் பெரிய பித்தளைத் திருமேனி செய்வித்தும், எல்லாத் திருமேனிகளுக்கும் உருத்திராக்கமாலை, பொற்பூ, திருக்கைக் காறை, திருப்பட்டிகை, திருக்காற்காறை, மோதிரம் முதலியன செய்வித்தும், பெரிய நிலைவிளக்குச் செய்வித்தும் கொடுத்துள்ளார். இன்னும் வைரவர், திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரின் செப்புத் திருவுருவங்களும், பலவித அணிகலன்களான திரண்மணி வடம், வீரப்பட்டம், திருக்குதம்பைத்தகடு உருத்திராக்கக் காறை, பட்டைக்காறை, சூலம் முதலியன செய்வித்தும் உள்ளார்.

சர்வசிவபண்டிதர் இராசராசுவரத்தில் பூசைசெய்த சிறப்பில் உள்ளம் பூரித்த ஊரவர் பலர் செய்த உபயங்கள் சாசனத்தில் இடம்பெற்றுள்ளன.

## திருமுறைச் செல்வம்

தமிழ்மொழியில் எழுந்த வழிபாட்டுப் பாடல்களான திருமுறைகள்போன்று விண்ணப்பப்பாடல்கள், போற்றும் பாடல்கள் வாழ்த்தும் பாடல்கள் உலகில் வேறெந்த மொழியிலும் எழவில்லை.

திருமுறைகள் இராசராசன் காலத்துக்கு முன்னரே இருந்தன; அவன் காலத்திலும் உண்டாயின, அவனுக்குப் பின்னரும் எழுந்தன. இருபத்தேழு நட்சத்திரங்கள் பன்னிரண்டு இராசிகளில் இடம்பெற்று நம்மீது அதிகாரம் செய்தாற்போல, இருபத்தேழு பெரியவர்கள் பாடியருளிய பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் பன்னிரு திருமுறைகளாய் அமைந்து நமக்கு அருள் பாலிக்கின்றன.

இத்தகைய புனிதப் பாடல்களை இறைவன் சந்நிதானத்தில் பாடுதல் திருப்பதியம் விண்ணப்பித்தல் எனவழங்கி வந்தது. சோழர்காலத்தில் திருப்பதியம் விண்ணப்பித்தல் பெருவழக்காய் நிலவியது. விண்ணப்பஞ் செய்த பிடாரர்களுக்கு அரசறிய ஊரறிய நெல்வயல்கள் அளிக்கப்பெற்றிருந்தன.

★ உலகியல் நாகரிகம், ஆன்மிக நாகரிகம் தமிழர் கண்டவை ★

விண்ணப்பஞ் செய்வோர் கட்டாயமாகச் சிவதீட்சை பெற்றவராதல்வேண்டும். சிவதீட்சை பெற்ற மகிமை யினுலே சிவம் என்னும் திருநாமம் பெற்றவராய் இருந் தனர். திருப்பதியம் கேட்டுச் சிவபெருமான் உவந்தருளி ஞர் என்று சுந்தரமூர்த்தி நாயனுர் சாட்சி கூறுகிறுர். திருமுறைகள் பல்வேறு அற்புதங்கள் செய்தமை வரலாறு கண்ட புதுமை.

திருப்பதியம் விண்ணப்பஞ் செய்தவர்களுக்கு வேண்டு வன கொடுப்பதற்கு முதலில் நிபந்தம் ஒழுங்குசெய்தவன் பல்லவ வேந்தருள் ஒருவரான நந்திவர்மன். அவன் காலம் 825 - 850 ஆகலாம். இவன் சிவனை முழுதும் மறவாத சிந்தையன். திருநீற்றை நிறையப் பூசியவன்,

நந்திவர்மன் திருவல்லம் திருக்கோயிலுக்கு 842 ஆம் ஆண்டளவில் விக்கிரமாதித்த சதுர்வேதிமங்கலம் எனப் பெயரிட்டு மூன்று ஊர்களைத் தானஞ்செய்திருந்தான். இந்த நிபந்தம் ஆண்டுதோறும் 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும் வருமானமாக உள்ளது. காடி என்பது ஓர் அளவை. மூன்று காடி ஒரு கலன் என்பர். கழஞ்சு பொன்னின் நிறை. (பிற்காலத்தில் எங்கள் நாட் டில் வெள்ளைக்காரரின் பவுண் 4 சேர்ந்தது ஒருகழஞ்சு.)

## திருவத்துறையில் சிவப்பிராமணர்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்துத் திருவத்துறைச் சிவன்கோயிலில் இரண்டு பிராமணர் மூன்று வேளைகளி லும் திருமுறை பாடினர்கள். அவர்களுக்கு சிவகோசரி பிடாரன் தேசவிடங்கன் நிலதானம் செய்துகொடுத்த காலம் 943ஆம் ஆண்டு. இது போதாதென்று 959ஆம் ஆண்டில் தானத்தை மேலும் அதிகரித்துள்ளான்.

## தேவாரம் அருளிப் பாடுவதற்கு சிவதீட்சை அவசியம்

இராசராசன் சிவபெருமானை மறவாதவன். சிவப் பணி புரிந்தவன். அவன் சிவதொண்டு செய்வதற்கு அரு ளையும் யோக்கியமும் அநுமதியும் பெறுவதற்கு உத்தர வுப் பக்குவம் சிவதீட்சை. அவன் சைவக்குருவான ஈசான சிவம் என்பவரிடமே தீட்சை பெற்றவன். சர்வசிவபண்டிதர் என்பவரைத் தன் கோயிற் பூசகராகவும் அரண்மனைப் பெரிய குருவாகவும் கொண்டவன். நம்பியாண்டார் நம்பி, கருவூர்த் தேவர் முதலான பெரிய பிராமணர்கள் அவனுக்குப் பழக்கமாயிருந்தனர்.

திருமுறையோதுவோர் சிவதீட்சை பெற்றுச் சிவப் பொலிவோடு இருந்தமைபோல, உடுக்கை கொட்டி மத்தளம் வாசிப்போரும் சிவதீட்சை பெற்றிருந்தனர். சோமசிவன் உடுக்கை வாசித்தவன். அவனுக்கு சூரிய தேவ கிரம வித்தக ஆலால விடங்கன் என்பது பழைய பெயர். கிரம வித்தகம் வேதம் ஓதுவதில் திறமை. எனவே பிராமணப் பெரியார் சிவனுக்கு உடுக்கை வாசித் துள்ளமை சிவப்பற்றேயன்றி வேறில்லை.

## சிவதீட்சை பெற்ற தேவரடியார்கள்

தேவரடியார்கள் தேவடியாளராகி விலைமாதராகிக் கோயில்களை மாசுபடுத்தியமை பறங்கியர்காலத்திலா யிருத்தல்வேண்டும். ஆனுல் பொற்காலமாய முற்காலத் திலே கோயிற்றெண்டு செய்த பொற்புடைப் பெண்டிர் இசைநாடகம் வளர்த்த சிவப்பிரியைகளாவர். அவர்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், என வழங் கினர். இவர்கள் தேவாரமும் பாடினர்கள். வலம்வந்த மடவார்கள் நடமாட என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் போற்றும் வகையில் அவர்கள் உயர்ந்தவர்கள். பெண்கள் பலர் கோயிற் பிணைப்பிள்ளைகளாயிருந்தனர்.

## இராசராச சோழப் பேரரசனின் சிறப்புப் பெயர்களும் விருதுப் பெயர்களும்

இராசராசனின் இயற்பெயர் அருள்மொழித்தேவன் அவன் முப்பத்தைந்தாம் ஆண்டளவில் அரசுகட்டில் ஏறும்வரை அந்தப்பெயரே வழங்கிவந்தது. அவன் அரச னுகிப் பிறமன்னர்களை வென்றபின்னர், இராசராசன் என் னும் பெயர் வழங்கலாயிற்று. அவன் சேரநாடு, பாண்டி நாடு, ஈழநாடு ஆகிய முந்நாடுகளை வென்றதால் வழங்கிய பெயர் மும்முடிச்சோழன். அவன் மூன்று அரசர்களின் வல்மை பெற்றவன் என்னும் கருத்தில் பெற்ற பெயர், மும்மடிச்சோழன். இராசராசன் என்னும் பெயரை முதலில் பெற்றவனுதலால் முதலி ராசராசன். அவனின் வலிமைகருதி வழங்கியபெயர் இராசேந்திரசிங்கன். அவன் சிவபெருமானிடம் பெரும் பக்திகொண்டு பல சிவாலயங்களைக் கட்டிச் சைவம் வளர்த்தவகையில் பெயர் சிவபாதசேகரன். சோழப்பெரு மன்னர்களுள் இந்திரச் சிறப்பும் சிங்கத்தின் வலிமையும் கொண்டவனுதலால் வழங்கிய பெயர் சோழேந்திரசிங்கன். அவன் சோழேந்திரசிம்மேசுவரன் என்னும் திருநாமத் தோடு ஒரு சிவாலயமும் அமைத்துள்ளமை ஈண்டு நினை விற்கொள்ளல் பொருத்தமாகும். சூரியகுலத்தவராய சோழமன்னருள் மாணிக்கம் போன்றவன் என்னும் கருத் தில், இரவிகுலமாணிக்கம் எனவும் அவனுக்குப் பெயர் வழங்கியது. மன்னர்களுக்குள் சிறந்து விளங்கியதால் க்ஷத்திரியசிகாமணி என்றும் ராசாசிரயன் என்றும் பெயர்கள் கிடைத்தன. சேரமன்னனை வென்றவனுக்கு கேரளாந்த கன் என்றும், பாண்டியனை வென்றமையால் பாண்டிய குலாசனி என்றும், சிங்களவரை வென்றவனுதலால் சிங்க ளாந்தகன் என்றும், பெருங்கீர்த்தியுடையவனுதலால் கீர்த்திபராக்கிரமன் என்றும், இராசகேசரிவர்மன் என்றும், பெயர்கள் வழங்கின. இடைக்காலத்துச் சோழப்பெரு மன்னர்கள் பாரம்பரியமாக இராசகேசரி, பரகேசரி என் னும் பெயர்களில் ஒன்றைத் தமக்கிட்டுவந்த வகையில் இராசராசன் இராசகேசரி என்னும் பட்டத்தை வழங்கிவந் தான். அவன் இராசகேசரி எனப் புனைந்த பட்டம் அவ னுடைய மெய்க்கீர்த்தி என்னும் சாசனங்களில் பெருவா கப் பயின்றுவந்துள்ளது. அவன் அயல்நாடுகளெங்கும் பெருவெற்றி பெற்றுவந்தமையால் பெற்ற பெயர் சயங் கொண்ட சோழன் என்பதாகும். அவன் குடிமக்களின் பாராட்டையும் அன்பையும் பெருமளவில் பெற்ற மையால் பெற்றபெயர் சனநாதன். அவன் சோழப் பேரரசர்களுள் நிகரில்லாத பெரியவனுதலால் பெற்ற பெயர் நிகரிலி சோழன் என்பதாகும். அவன் தெலுங்க ருக்குப் பாதுகாப்பளித்தமையால் வழங்கிய பெயர்

★ இலிங்க வழிபாடு, பசுபதி வழிபாடு தமிழர் கண்டவை ★

தெலுங்குகுலக்காவலன். அவன் இயல், இசை, நாடகம் வளர்த்து மக்களை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்திருந்தமையால் பெற்ற பெயர் நித்தவிநோதன். இவற்றைவிட இன்னும் பஞ்சவன், மாராயன், மாதண்டநாயகன் முதலாய பல பட்டங்களும் அவனுக்கு வழங்கி வந்தன.

இத்தகைய சிறப்புப்பெயர்களையும் பட்டங்களையும் பெற்ற இராசராசப்பேரரசனின் நினைவாகச் சோழநாட்டுப்பிரதேசங்கள் பல அவன் பெயர்களால் வழங்கிவந்தன. அவை இராசராசச்சேரி, இராசமார்த்தாண்டச்சேரி, அருள்மொழித்தேவச்சேரி, சனநாதச்சேரி, நித்தவிநோதச்சேரி, இராசகேசரிச்சேரி, நிகரிலிசோழச்சேரி, சிங்களாந்தகசேரி என்பனவும் பிறவுமாம்.

இராசராசனை அபயன் எனத் திருமுறைகள் கண்ட புராணமும், தண்டியலங்காரமும் குறிக்கின்றன. வீரசோழியத்துக்கு உரைசெய்த நேமிநாதர் இராசராசனை இராசகண்டரவன் எனக்குறித்து, ‘‘குடைநின்றது செம்மை, ஞாலம் நடந்தது நன்மை’’ என வாழ்த்தியுள்ளார். இராசராசனின் இளமைப்பெயர் அருள்மொழித்தேவன் என்பதை நினைவுபடுத்திக் குணவீர முனிவர் அவனுடைய இருபத்தோராம் ஆட்சியாண்டில் (1006இல்) பாடிய பாடல் ஒன்று மெய்க்கீர்த்தி வரிசையில் இடம்பெற்றுள்ளது. ‘‘அலைபுரியும் புனற்பொன்னி யாறுடைய சோழன் அருள் மொழிக்கு யாண்டிருபத்தொன் றுவதென்றும் கலைபுரியும் மதிநிபுணன் வெண்கிழான் கணிச்சைக் காமருபொற் சூரியன்தன் நாமத்தால் வாமநிலை நிற்கும் கலிங்கிட்டு நிமிர்வைகை மலைக்கு நீடுழி இருமருங்கும் நெல்விளையக் கண்டோன்’’.

## புலவர்கள் புகழ்ந்த புரவலன் இராசராசப் பேரரசன்

இராசராசன் காலத்துப் புலவர்கள், அடியார்கள், பொதுமக்கள் முதலாய பலரும் அவன்புகழைப் பெருமளவில் போற்றியுள்ளார்கள். சமயவிலக்கியங்களிலும், பொதுமக்கள் இலக்கியங்களிலும் அவன் புகழ் பரந்துள்ளது. இராசராசன் காலத்து எழுந்த மெய்க்கீர்த்தி முறையே பெரிய இலக்கியத்தொகுப்பாயுள்ளது. மெய்க்கீர்த்தி பாடிய புலவர்களின் பெயர்கள் வெளிவரவில்லை.

மெய்க்கீர்த்திகளைவிட இராசராசன் புகழ்பேசிய பொதுமக்கள் இலக்கியமாய நாடகங்கள் அக்காலத்தில் கோயில் விழாக்களில் நடிக்கப்பெற்றன. இந்த நாடகமாந்தருக்கு வேண்டுவன கொடுத்தவன் இராசேந்திர சோழன். இந்நாடகம் கோயிலில் நடிக்கப்பெற்றதால், அரசன் கோயில் கட்டிய வைபவத்தையே அது பெருமளவில் விளக்கியதாகலாம் என்பர். இராசராசன் பெயரால் இராசராசேச்சுர விஜயம், இராசராசேச்சுர நாடகம் என்பன பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தன.

இராசராசவிஜயம் என்னும் நூலை நாராயணன் பட்டாதித்தன் என்னும் புலவர் எழுதியுள்ளார். வைத்தியர்கள் மரபில்வந்த இப்புலவர் இந்நூலைப் பொதுமக்கள் மத்தியில் படிப்பதற்கு இராசராசனே நிலதானம் செய்துள்ளான் என்பது கல்வெட்டு. இந்நூலில் இராசராசனின் செங்கோன்மை, தமிழ்ப்பற்று, புலமை, இறைவிசுவாசம், தானதருமங்கள், வீரம், வெற்றிச்செயல்கள் முதலான புகழ் கூறப்பட்டுள்ளன.

சிறப்புக்கூறிய புலவர்கள் அடியவர் கூட்டம், ஆதிச்சங்கம், பெருமைமிக்க சோழன், சைவ மாதர் என்றெல்லாம் கூறியுள்ளார்கள். இராசராசனின் கோயிற்பணி, திருமுறைப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, நாட்டுப்பணி என்பன மக்களைப் பெரிதும் கவர்ந்தன. மெய்க்கீர்த்தி என்னும் கல்வெட்டு, செப்பேட்டு இலக்கியம் இராசராசனை முன்னிட்டே எழுந்தன. மெய்க்கீர்த்தி பாடப்பெற்ற முற்பேரரசன் இராசராசனேயாவன். மெய்க்கீர்த்தி முதலில் 996ஆம் ஆண்டிலேயே எழுந்ததாகும்.

## இராசராசனின் தேவிமார்

முற்காலத்தில் மூவேந்தர்களும் பிற்காலத்தில் பேரரசர்களும் தங்கள் மனையை அலங்கரிப்பதற்குப் பெண்கள் பலரை மணந்திருந்தனர். பகையரசர்களை வென்று அவர்தம் பெண்ணையோ, சகோதரியையோ மணந்துகொள்ளும் வழக்கத்தோடு, சிற்றரசர்கள் சிலர் மனமுவந்து தம் பெண்களைப் பேரரசர்களுக்கு மணம்செய்துகொடுத்து நட்புரிமை பாராட்டியதும் உண்டு.

பேரரசர்களின் மனைவியரைப் பெரும்பாலும் தேவியர் எனவே புலவர்களும் பொதுமக்களும் வழங்கிவந்தனர். மன்னர்மன்னனான இராசராசனுக்குப் பல தேவியர்கள் இருந்தார்கள். தந்திசக்திவிடங்கியார் என்னும் உலோகமாதேவியார் பட்டத்து அரசியாவர். இன்னும் திரைலோக்கியமாதேவி, பஞ்சமன்மாதேவி, சோழமாதேவி, பிருதிவிமாதேவி, இலாடமாதேவி, மீனவன்மாதேவி, வானவன்மாதேவி. இராடமாதேவி, அபிமானவல்லி, நக்கன்தில்லை அழகியார், காடன்தொங்கியார், கூத்தன் வீரநாராணியார், இளங்கோன்பிச்சியார் ஆகியோரும் இருந்தார்கள் என அறியக்கிடக்கிறது.

இவர்களுள் வானவன்மா தேவியார் வயிற்றிற்பிறந்த வீரமைந்தன் இராசேந்திரசோழனவன். பட்டத்துத் தேவியாராய உலோகமாதேவியார் ஒலோகமாதேவியார் எனவும் வழங்கிவந்தார். அவர் திருவையாற்றில் தன் பெயரால் உலோகமாதேவீச்சுரம் என்னும் திருக்கோயில் எடுப்பித்து, அதன் பரிபாலனத்துக்குப் பெருமளவில் நிவந்தம் அளித்துள்ளமை கல்வெட்டுக்களில் துலாம்பரமாகவுள்ளது.

இன்னும் இராசராசன் திருவிசயலூரில் துலாபாரம் புகுந்தபோது, தானும் உடனிருந்து இரண்யகர்ப்பம் புகுந்தார் என்பது கல்வெட்டு வாசகம். இராசராசன் துலாபாரம் புகுந்த காலம் அவனுடைய இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு என்பதால் அது 1014ஆம் ஆண்டாதல் வேண்டும். அதைப்பற்றிக் கூறும் திரு விஜயலூர்ச் சாசனத்தின் வாசகம் வருமாறு.

‘‘கோராச கேசரிவர்மரான ஸ்ரீ ராசராசச்சோழதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது... நம்முடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ ராசராசதேவர் இவ்வூர் திருவிஜயலூர் மாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று, நம்பிராட்டியார் தந்திசக்திவிடங்கியார் இரண்யகர்ப்பம் புக்கருளிய இத்திருவிஜயலூர்

மாதேவர்க்கு அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிவந்தங்களுக்காக வைச்சகாசு 4508.

## இராசராசனின் மக்கள்

இராசராசன் பலவகைச் சிறப்புக்களால் புகழ்பெற்ற வகையில் நல்லறமனைவியராலும் நல்லசகோதரர்களாலும் நன்மக்களாலும் பெருஞ்சிறப்புப் பெற்றவன். அவனுக்கு இராசேந்திரன் என்னும் மைந்தனும், குந்தவை, மாதேவடிகள் முதலாய மூன்று பெண்களும் இருந்தனர். இவர்களுள் குந்தவை என்னும் பெயர் அவன் தன் அன்புத் தமக்கையார் குந்தவை என்பாரின் நினைவு நிலைக்கவைத்த பெயராகும். இத்தகைய புகழ்பெற்ற குந்தவைக் குழந்தை வளர்ந்து பெரியவளான காலத்தில் இராசராசன் வேங்கி நாட்டுப் பெரும்போரில் சத்தியவர்மன் என்பானோடு நட்புப்பூண்டு சத்திராசிராயன் என்பானோடு போர்புரிந்து வெற்றிபீட்டினான். தன் நண்பனை அரசனாக்கி, அவன் தம்பியாய விமலாதித்தன் என்பானை இளவரசனாக்கித் தன்மகள் குந்தவையை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். மாதேவடிகள் என்னும் பெண்ணை நடுவிற் பெண் எனக் கல்வெட்டுக் கூறுவதால் மூன்றும் பெண் ஒருத்தி இருந்தாள் என்பது தெளிவு. மாதேவடிகளைப் பற்றியும் அவள் தங்கை கடைக்குட்டியைப்பற்றியும் தகவல்கள் கிடைப்பதாகவில்லை.

## இராஜராஜன் அரியணை ஏறிய காலத்து சோழநாட்டுச் சுற்றுப்புற நாடுகள்

அருள்மொழித்தேவன் என்னும் இளவரசன் 985ம் ஆண்டில் அரசனானபோது சோழநாடு சிறிய தனிநாடு: வடக்கில் தொண்டைநாடு. கோதாவரிக்கும் கிருஷ்ணை நதிக்கும் இடைப்பட்ட வேங்கிநாட்டைச் சாளுக்கியர் ஆண்டனர். அவர்கள் அதிகாரம் நெல்லூர்வரை வியாபித்திருந்தது. தெற்கில் பாண்டிநாடு. மேற்கிற் சேர நாடு, கங்கநாடு, குடகுநாடு, நுளம்பபாடி, தடிகைபாடி, தனித்தனி சிற்றரசுகளாயிருந்தன. வடமேற்கில் சாளுக்கியர் துங்கபத்திரைக்கு அப்பால் வலிமையுற்றிருந்தனர். தெற்கில் கடலுக்கு இப்பால் இலங்கையில் ஐந்தாம் மகிந்தன் அதிகாரம் பெற்றிருந்தான்.

## இராசராசன் தன் வலிமையால் வென்ற மன்னர்கள்

காந்தளூரில் கப்பற்படை வலியுள்ள பாஸ்கரரவிவர்மன், சேரநாட்டு மன்னன், பாண்டியன் அமரபுயங்கன், குடமலைநாட்டுக் கொங்காள்வார்.

## இராசராசன் வென்றுகொண்ட நாடுகள்

வேங்கைநாடு, கங்கைபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், இரட்டைபாடி, ஏழரையிலக்கம், முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் (மாலைதீவு).

## இராசராசன் விட்டுச்சென்ற சோழப் பேரரசு

பாண்டிமண்டலம், சேரமண்டலம், தொண்டைமண்டலம், கங்கமண்டலம், கொங்குமண்டலம், நுளம்பபாடி நாடு, கலிங்கநாடு, ஈழமண்டலம் முதலிய நாடுகளின் கூட்டம் ஒரு பேரரசு.

## இராசராசப் பேரரசன் பிறந்தநாள் பெருவிழா

நாடாண்ட மன்னர்களின் பிறந்தநாள் பெருவிழாவாக அவரவர் நட்சத்திரந்தோறும் ஆண்டு எல்லையில் நடைபெற்றன. அவ்விழாவை நாள்மங்கலம் என இலக்கியங்கள் வழங்குகின்றன. இராசராசன் தோன்றியநாள் ஐப்பசி மாதத்துச் சதயநாளாகும். ஆண்டுதோறும் ஐப்பசிச் சதயநாள் அவன் எடுத்தகோயில்களில் வெகு சிறப்பாக சனரஞ்சகமாக நடைபெற்றது. கோயிலில் காலைதொடக்கம் அபிடேகம் ஆராதனைகள் நடைபெற்ற பின், நண்பகல் மகேசுரபூசையும், மாலைவிழாவும், இசை நாடகவிருந்தும் நடைபெற்றன. தஞ்சைக் கோயில் எழுந்த வரலாறு நல்ல நாடகமாக நடிக்கப்பெற்றது. கலையார்வமுள்ள நாடகமாந்தர் பங்குபற்றிப் பெரும் பாராட்டும் பரிசுவகைகளும் பெற்றனர். இராசராசன் தோன்றிய ஆண்டு 945 அல்லது அதற்கு முன்பின்னாக இருக்கலாம்.

## இராசராசனின் இணையிலாப் பெருமை

முன்னர் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு தொண்டைநாடு என்றெல்லாம் பெயர்பெற்று நிலவிய பகுதிகள் இராசராசனின் வலிமையால் தமிழ்நாடு என நின்று நிலவும் சூழ்நிலை உருவாயிற்று.

இராசராசன் சிவபெருமானிடத்தும், சிவாகமங்களிலும், திருமுறைகளிலும், சைவ சமயத்திலும், திருநீற்றிலும் தீவிரபற்றுள்ளவன். ஆயின் சமயக்காழ்ப்பு இன்றி மறுசமயங்களும் நிலைக்க வழிவகுத்து உதவிபுரிந்தவன்.

வேதம்வல்ல அந்தணர்களுக்கு வேலிக்கணக்காக நிலங்கள், ஊர்கள், வசதிகள் செய்துகொடுத்ததோடு, ஆகமசீலர்களைத் தேடி அணைத்து ஆதரித்து சிவாசாரியார்களின் பதவிக்குப் பெருமதிப்புக் கொடுத்தவன்.

சிவாசாரியர்கள் எல்லோருக்கும் சிவதீட்சை கொடுத்து, எங்கும் சிவமயம் பொலியச் செய்தவர்கள் ''வேணியர் அருள்செய்த ஆகமத்திறன் என்றும் மெய்ப் பூசை எய்த ஆகமவிதியெலாம்'' என்றும். நாட்டில் நிலவிய சூழ்நிலையைப் பின்வந்த சேக்கிழார் சுவாமிகள் கண்ணுற்கண்டு பெரியபுராணத்திற் பாடியருளியுள்ளார். சேக்கிழாரைப்போலச் சயங்கொண்டாராய சைவசிகாமணியும் தமது கலிங்கத்துப் பரணியிற் பிற்காலத்திற் பாடிப்புகழ்ந்துள்ளார். பரணிப் பேய்கள் இராசராசனைப் போற்றுகின்றன.

★ வானுயர் விமானங்கள், கோபுரங்கள் கட்டியவர் தமிழர் ★

அக்காலத்துச் சிவாலய அமைப்பு, தெய்வத் திருவுருவ வார்ப்பு, பொழிவு, பிரதிட்டை, பூசை, விழாக்கள் யாவும் ஆகம விதிப்படியே அமைந்தன. சைவர்கள், ஆகமாந்திகள். ஆகமம் சைவர்களுக்கே சிறப்பான நூல்கள். ஆகமங்களை ஏற்காதவர்கள் அகப்புறச் சமயத்தவர். வேதங்களை ஏற்காதவர்கள் புறச்சமயத்தவர்கள். அவர்கள் புத்தர் சமணர் முதலானோர்கள்.

## இராசராசேசுவரம்

திருவள்ளுவர் நடுவுநிலைமையைப்பற்றிக் கூறும்போது உற்றாரிடத்தும் அயலாரிடத்தும் ஒன்றாக நிற்கும் நிலை என்பதை விளக்குவதற்கு "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பர். எச்சம் என்பது நன்மக்களைக் குறிப்பதோடு, தக்கவரின் மறைவின்பின் எஞ்சி நின்றவற்றையும் குறிக்கும் என்று உரைகாரர் கருதுவர்.

இராசராசனின் மைந்தன் இராசேந்திரன் தந்தையை விஞ்சிய வகையில் தஞ்சையை ஆண்டவன். இராசராசனின்பின் எஞ்சிநின்ற பெரும் நினைவெச்சங்களுள் அவன் அமைத்த தஞ்சைக்கோயில் ஒன்றாகும். தஞ்சைப் பெருங்கோயில் என்றும், இராசராசேசுவரம் என்றும், பிரகதீஸ்வரர் ஆலயம் என்றும் பெயர்பெற்றது அது.

இராசராசனின் சிவபக்திக்குக் கலங்கரை விளக்கமாக எழுந்த ஆலயம், காவிரிநதியின் அணிகலனான தஞ்சைமாநகருக்கு ஒளிமணி. தனித்தமிழ்ப் பாணியில் திராவிட சிற்பம் களிநடஞ் செய்யுமாறு உருவான ஆலயம் தமிழினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டு. உயர்ந்த தாது கோபங்கள், பிரமிட் கோபுரங்கள், நீண்டசுவர்கள் பெருமிடத்தைப்பற்றி நிற்பனவன்றிக் கலையம்சம் என்பதை அணுவளவும் காட்டுவனவல்ல. தஞ்சைக்கோயில் கலா தேவதை நடனமிடும் கவின்பெருங் கட்டடம்.

தஞ்சைக்கோயிலின் கண்கவர் வனப்பு நெஞ்சை அள்ளி நிற்கும்போது, அதன் நீள அகல உயரம் பெரிய பொறியியலாளரைப் பிரமிப்படையச் செய்கின்றன. இதன் நீளம் 793 அடி. அகலம் 397 அடி. உயரம் 216 அடி. வைத்த கண்களை வாங்காமல் பார்த்தபின் மேலே அண்ணாந்து பார்க்கும்போது அந்தரத்தில் அதிசயங்கள் ஆனந்தக்கூத்தாடுகின்றன. விமானத்து உச்சியில் அமைந்த தனிப்பெருங் கருங்கல்லின் நிறை எண்பது தொன். எண்பது தொன் நிறையுள்ள கல்லை 216 அடி உயரத்தில் வைப்பதற்குத் தமிழனுக்கிருந்த பொறியியல் நுட்ப அறிவும் ஆற்றலும் தலைவணக்கத்துக்குரியன. உச்சியில் ஒளிகாலும் கலசம் 3383 பலம் நிறையுள்ளதாகவும் அதற்கு ஒளியூட்டும் பொற்றகடு 2926 கழஞ்சு பொன் என்றும் மதிப்பர். விமானத்தின் உச்சியிலமைந்த பெரிய கல்லின் நாற்புறங்களிலும் மூலைகளில் இவ்விரண்டு நந்திகள் அழகாகப் படுத்திருக்கின்றன.

ஆயிரவர் கூடி ஆறாண்டுக்காலம் அன்போடும் ஆர்வத்தோடும் இணையில்லா வகையில் ஈடுபட்டு உடல்வருத்தம் பாராது ஊக்கத்தோடு எடுப்பித்த ஏற்றமுள்ள இக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றும் அழகாக உள்ளது. இதன் கும்பாபிடேகம் பேரரசனின் ஆட்சியின் வெள்ளிவிழா ஆண்டில் நிகழ்ந்திருக்கவேண்டும். ஆலயத்துக்குப் பெருமைதரும் கலையம்சகளுள் உயர்ந்த தான விமானத்துக்கு தட்சிணமேரு என்று பெயர்.

கோயிலின் முதல்வாயில் கேரளாந்தன் வாயில் என்றும், இரண்டாவது இராசராசன் வாயில் என்றும் வழங்கின. இரண்டாம் வாயிலுக்கு அப்பால் கோயிற்பகுதி மிகப்பரந்த பரப்பில் செங்கற்கள் பரப்பி அமைக்கப்பெற்றுள்ளது. இப்பரந்த வெளிப்பரப்பில் இறைவனுக்கு இடம் அமைந்துள்ளது. அங்கே வழக்கமான முறையில் கருவறை, நடுமண்டபம், பெரியமண்டபம், தியாகேசப்பெருமான் மண்டபம், தாபனமண்டபம், வாத்தியமண்டபம் என்னும் ஆறுமண்டபங்கள் அமைத்துள்ளன. உட்கோயிலில் ஏழுவாசல்கள் உள்ளன. ஒவ்வொரு வாசலின் இருமருங்கிலும் வழமைபோல் துவாரபாலகர் காவல் காத்துநிற்பதோடு, உள்ளே என்ன அற்புதம் எனவும், இறைவன் ஒருவனே என்றும் கையமைப்பால் குறிப்பிடுகின்றார்கள். துவாரபாலகர் தோற்றமும் வேலைப்பாடும் பெரியவை. அவை 18 அடி உயரம் உள்ளவை. உட்கோயிலின் வாசலுக்குத் திருஅணுக்கன் திருவாயில் என்பது திருநாமம்.

கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமான் மிகவும் உயரமானவர். ஏறக்குறைய 13 அடி உயரம் உள்ள அவருக்கு அர்ச்சகர் சாரம் அமைத்து ஏறிநின்று பூசைசெய்தல் வழக்கம். கீழ்ப்பாகமாய ஆவுடையாரின் சுற்றளவு ஏறக்குறைய 33 அடியாகும். இங்கெழுந்தருளிய இறைவன் திருநாமம் தஞ்சைப் பெருவுடையார். இவரை வடமொழியில் பிரகதீசுவரர் எனவழைப்பர். இங்குள்ள இறைவியின் திருநாமம் பெரியநாயகி. வடமொழியில் பிருகந்நாயகி. இவர் பூசைக்குரிய ஆகமம் மகுடாகமம். இத்திருக்கோயில் பிரமிப்புக்குரிய வேறோர் அமைப்பு இங்குள்ள நந்தியாகும். இது ஒரே பெருங்கல். பெருங்கல்லில் பத்தொன்பதரை அடி நீளமும் எட்டரை அடி அகலமும் பன்னிரண்டு அடி உயரமும் உள்ளது. இது கலைப்பொலிவு சிறந்தமைந்ததோடு கம்பீரமும், களையும் கொண்டது. கழுத்தில் நிரைநிரையாக கோவையாக அமைந்த மணிகளின் திரள் மிகவும் அழகானவை. இவர் அமைந்துள்ள மண்டபத்தைச் சேர்ந்த பெருவெளி 800 அடி நீளமும் 400 அடி அகலமும் கொண்டது.

திருக்கோயிலின் திருச்சுற்று அழகும் அமைவும் பொருந்தியது இதற்கு அக்காலத்தில் திருச்சுற்று மாளிகை என்று பெயர். இத்திருச்சுற்றின் எட்டு மூலைகளிலும் அட்டதிக்குப் பாலகர்கள் அழகாக நிற்கிறார்கள். திக்குப்பாலகர்களின் கோயில்களுக்கும் அழகிய விமானங்கள் பொன்போர்த்த செப்புக்குடங்கள் உண்டு. கோயிலின் சண்டேசர் இருப்பிடமும் அழகானது. இத்திருச்சுற்றுமாளிகையைக் கட்டிமுடித்தவன் இராசராசனின் படைத்தலைவருள் ஒருவனான மும்முடிச் சோழப் பிரமராயன் என்பவனாவன்.

இக்கோயிலுக்குப் பெருமைதரும் பெருவிமானம் தமிழில் உத்தம விமானம் எனவும் வழங்கும். இது சதுர வடிவமானது. பதின்மூன்று அடுக்குகளைக் கொண்டது

★ தமிழரசர் இமயம்வரை ஆணை செலுத்தியதும் உண்டு ★

இதன் உச்சியிலுள்ள பெரிய எண்பது தொன் நிறையுள்ள கல் பிரமரந்திரக்கல் எனப் பெயர்பெற்றது. இது கோயிலுக்கு நான்குமைல் தூரத்தில் கிடந்ததாம். இதனருகில் கிழவியொருத்தி கொட்டிலமைத்து வாழ்ந்தாளாம். அவள் திருப்பணி வேலையாட்களுக்குத் தாகந்திர நீரளித்து வந்தவளாம். அவளது பேரன்பு காரணமாக இக்கல்லையும் உபயோகித்தார்களாம். இக்கல்லை மேலே ஏற்றுவதற்கு அங்கிருந்தே சாரம் அமைத்தார்களாம். அந்த இடம் சாரப்பள்ளம் என வழங்குகின்றதாம். "கிழவியளித்த நிழலில் நாம் தங்கியிருக்கிறோம்'' என்று இறைவன் அரசனுக்குக் கனவிலே கூறியருளினாராம். இவை யாவும் புராணங்கள் நூல்களில் வழங்கிவந்த கதை.

''அம்மையார் நிழலில் யாம் அமர்வோம் என்றருள் செய்த செம்மையார் வீற்றிருக்கும் திருத்தஞ்சை'' என்பது மயூரத்தல புராணம். "நதியுடைக்கோன் முன்னோர் நரைமுதியாள் நீழல் வதிகின்றோம் என்னவந்தான்'' என்பது தஞ்சைப் பெருவுடையார் உலா. இராசராசன் அந்த முதியவளுக்கு வேண்டிய வசதிகள் நல்லமுறையில் செய்து வாழவைத்தான் என்பர்.

## தஞ்சாவூர்ப் பழமை

தஞ்சாவூரின் தனிக்குளத்து இறைவனைத் திருநாவுக்கரசு நாயனார் தஞ்சைத் தனிக்குளத்தார் என்று திருவீழிமிழலைப் பதிகத்தில் போற்றியுள்ளார். திருவாரூர்த் தியாகேசப் பெருமானிடத்து ஆரா அன்புகொண்ட சோழர் தஞ்சைப் பெருமானைத் திருவாரூரார் எனவே மனமாரப் பாவனைபண்ணி வழங்குதல் வழக்கம் என்பர். இராசராசேசுவரத்தில் எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்த மூர்த்திக்குப் பெருமதிப்பு நிலவியது. (அதனாலேயே நாமும் முற்பகுதியில் அம்மூர்த்தியை வணங்கினோம்).

## தஞ்சைக் கோயிலுக்குக் கொடுத்தவர்கள்

இராசராசனின் கல்வெட்டுக்களில் இக்கோயில் சம்பந்தமானவை பலவாகும். நாம் குடுத்தவையும், நம் அக்கன் குடுத்தவையும், நம் பெண்டுகள் குடுத்தவையும், என்று அவன் குறிப்பிட்ட வகையில்; அவனும் தமக்கை குந்தவையும், மனைவியர்களும் இக்கோயிலுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெளிவு.

சக்கரவர்த்தியின் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத்தேவர் மாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார், தம் தந்தையார் இரண்டாம் பராந்தகர் என்னும் சுந்தரசோழர் நினைவாகவும், தாயார் வானமன்மா தேவியார் நினைவாகவும் திருவுருவங்கள் கொடுத்துள்ளார். பலவித பொன்னாபரணங்களும் வைரம் முத்து வகைகளும் கொடுத்துள்ளார்.

தம் பெண்டுகள் என்று இராசராசன் குறிப்பிட்ட வகையில் ஒலோகமா தேவியார் பிச்சாடனர் உருவமும், திரைலோக்கியமாதேவியார் கல்யாணசுந்தரர் உருவமும், அபிமானவல்லியார் திருமால் பிரமன் உருவங்களும், சோழமாதேவியார் இடபவாகன தேவர் உருவமும் உமா பரமேஸ்வரி உருவமும், பஞ்சவன்மாதேவியார் தஞ்சையழகர் உமாபரமேஸ்வரியார் உருவங்களும், இலாடமா தேவியார் பாசுபதமூர்த்தி உருவமும், பிருதுவிமாதேவியார், ஸ்ரீகண்டமூர்த்தியும் கொடுத்துள்ளார்கள். இச்செய்திகள் யாவும் கல்லில் எழுதப்பெற்றுள்ளன.

இவர்களின் வேறாய் அரசியல் அலுவல்கள் பார்த்தவர்களும், அரசனின் அபிமானிகளும் கோயிலுக்குக் கொடுத்தவை யாவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளன. காஞ்சிவாயில் உடையான், வேளாளன் ஆதித்தன், நாரக்கன், விழுப்பரையன், ஆதித்தன் சூரியன் முதலானோர் செய்த உபயங்கள் மிகப்பல.

இக்கோயிலுக்கு இராசராசன் அமைத்த பரிவார மூர்த்திகள் பலர். கோயிலின் திருச்சுற்றுமாளிகையை உய்யக்கொண்டான் வளநாட்டு அமண்குடியான் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து மும்முடிச்சோழப் பிரமராயர் கட்டுவித்தார் என்பது கல்வெட்டு.

## இராசராசேசுவரத்தில் திருவிழாக்கள்

மன்னன் தோன்றிய சதயநாள் மாதந்தோறும் விழாவாக நடைபெற்றதோடு, மாதந்தோறும் சங்கிராந்தி, ஆட்டைத்திருவிழா என்னும் ஆண்டுத்திருவிழா, கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகை விழா என்பனவும் பிறவும் நடைபெற்றன.

ஆட்டை விழா வைகாசி மாதத்தில் நடைபெற்றது. விழாக்காலங்களில் இராசராச நாடகம் நடிக்கப்பெற்றது. "திருமருவிய செங்கோல் வேந்தன்'' எனத்தொடங்குவது இதுபற்றிய கல்வெட்டு. அக்காலத்து நாடக மாந்தர் சாந்திக்கூத்தன் திருமுது குன்றனான விஜயராஜேந்திர ஆசாரியன் என்பவனைத் தலைவனாகக் கொண்டவராவர்.

திருவிழாக்கள் நடைபெற்ற ஒன்பது நாட்களிலும் எழுந்தருளும் மூர்த்திகளுக்கு பழவரிசியாலான போனகம்: பருப்பு, மிளகு, சீரகம், கடுகு, சர்க்கரை, நெய் கொண்டு சமைத்த புளிங்கறியமுது, காய்கறியமுது, பொரிக்கறியமுது நைவேத்தியமாயிருந்தன. விழாக்காலங்களில் சிவயோகியருக்கு மகேசுவர பூசை நடைபெற்றது.

பூசை நேரங்கள், காலை, உச்சி, இரவு சுவாமியை நீராட்டும் மஞ்சனத்தில் இலாமிச்சம்வேர், பெருஞ்சண்பக மொட்டு, ஏலவரிசி ஊறவிடப்பட்டன. நைவேத்தியம் பழவரிசிப் போனகம், கறியமுது, அடைக்காய் அமுது, வெள்ளிலை அமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அமுதளித்தவேளையில் குளிர்ச்சியைப்போக்கும் சீதாரியாய புகை இடப்பட்டது. புகையில் சந்தனம் பிரதானமாயிருந்தது. மெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்கும் சந்தனம் முப்பலம் என்பது கல்வெட்டு.

## கருவூர்த்தேவரும் இராசராச தேவனும்

கருவூர் என்னும் ஊர் சோழமன்னர்களோடு தொடர்பு பெற்ற பழையவூர். முன்னர் சங்க காலத்திலே திருமாவளவன் என்பான் இளமையில் உட்பகைவரிடமிருந்து உயிர் பிழைப்பதற்காக ஒளித்து வளர்ந்தவூர்

★ சேரர் சோழர் பாண்டியர் மூத்தகுடியினரின் மன்னர்கள் ★

கருவூர். இராசராசன் தஞ்சைக்கோயிலிற் கும்பாபிடேகஞ் செய்யும் கிரியையின்போது அஷ்டபந்தனம் பதம் தவறி இறுகாமை கண்டு வருந்தியபோது, ஒருவர் (போகர்) கருவூரில் உள்ள சித்தரைப்பற்றிக் குறிப்பிட்டதும், இராசராசன் கருவூர்த்தேவரை அழைத்து உபசரித்தபோது, அவர் மருந்தை இறுகவைத்தார். அச்செயல் ஒரு சித்து எனக்கருத இடமுண்டு. பெருஞ்சித்தராய கருவூராரை இராசராசன் தொழுது தனது இராசராசேசுவரத்துக்குத் திருவிசைப்பா பதிகம் பாடுமாறு கேட்டதும் அவரும் இணங்கி இறைவன்மீது அருமையான பதிகம் பாடியரு ளினர்.

கருவூர்த்தேவரின் உருவச்சிலை கருவூர்ப் பசுபதீஸ்வரர் கோயிலிலும், தஞ்சைப்பெருங்கோயிலிலும் உள்ளன. இவருடைய சமாதியும் தஞ்சைக் கோயிலின் அண்மையிலேயே உள்ளது.

கருவூர்த்தேவர் திருவிசைப்பாத் தொகுதியில் பத்துப் பதிகங்கள் பாடியுள்ளார். அவர் சிதம்பரம், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கிழக் கோட்டூர்மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், திருப்பூவனம், திருச்சாட்டியக்குடி, திருவிடைமருதூர், தஞ்சை, கங்கைகொண்ட சோழேச்சுரம் ஆதியதலங்களில் திருவிசைப்பா பாடியுள்ளார்.

கருவூர்த்தேவர் தாம்பாடிய பத்துப்பதிகங்களில் எட்டுப்பதிகங்களைப் பஞ்சமப்பண்ணில் தோய்த்துள்ளார். இவர் தஞ்சைக்குப்பாடிய பதிகமும் பஞ்சமப்பண்ணிலேயே அமைந்துள்ளது. இறைவனின் அழகை உலகத்தவர் தொழும் ஞாயிறு நூறுகோடி சேர்ந்தாற்போல் ஒளியுள்ளதென்பர். இறைவனின் நெற்றிக்கண் தம் கண்ணில் பதிந்துள்ளது என்றும், அவரின் சிலம்படி தம் நெஞ்சில் உள்ளது என்றும், அவர் விடையேறிக் குடை நிழலில் உலாப்போகும் போது, ஆன்மநாயகியர் நோயுறுவர் என்றும், தஞ்சை மக்கள் இரவிலும் யாழ்மீட்டு அவரைத்தொழுவர் என்றும், அவரின் அடிமுடியை திருமாலும் பிரமனும் அறியமாட்டார் என்றும், மக்கள் யாவரும் கூடிநின்று அவரை வணங்குவர் என்றும், அவரின் அழகில் ஆன்மாவாகிய தலைவி மயங்கி அழுகின்றாள் என்று நற்றாய் இரங்குகிறாள் என்றும், சிலர் நன்றாக வாழுங்காலத்தில் அவரை வணங்காமல், இறக்கும் காலம் அணித்தாக வணங்குவது ஏனென்றும், மிகப் பழையவர் பன்னெடுங்காலம் வருந்தி வணங்கியிருப்பவும் புத்தடியாராய தம்மை அவர் ஆட்கொண்டு நெஞ்சில் எழுந்தருளியது ஏன் என்றும், மேகம் மறைத்த சூரியன் போலவும் பாலில் படர்ந்த நெய்போலவும் இறைவன் மறைந்துள்ளார் என்றும், அன்புள்ளவர்களுக்கு ஒளிவிளக்குப்போலத் தோற்றுவார் என்றும், அவரின் அழகுக்கு அழகாக உள்ளவை சடையிற் கங்கையும், கங்கைநீர் வழிந்து திருநீற்றை அழிப்பதும் என்றும், ஒளிப்பவரும் இனிப்பவருமாய அவரை என்றென்றும் வணங்கும் வண்ணம் வாழவேண்டும் என்றும், தனியராயும் பல்லாயிர வராயும் உள்ளதன்மையர் தமக்குக் கனிபோல் இனியராய் கரும்புபோல் சுவைப்பவராய், ஆரமிர்தராய் தஞ்சாவூரில் எழுந்தருளியுள்ளார் என்றும், அவரை அருமருந்தாய காயகற்பம் உண்ட தாம் வணங்கி, அருள்பெற்றுப் பதிகம் பாடியதாகவும் கூறுவர். கருவூர்த்தேவர் இறைவனை நன்கறிந்தவர். பாலில் கலந்த நீரை நெருப்பு காய்ச்சிவிட்டாற்போல, மக்களிடம் கலந்த பாவத்தை இறைவன் போக்கிவிடுவர் என்னும் கருத்தமைந்த பாடலை வேறிடத்தில் பாடியருளியுள்ளார்.

கருவூர்த்தேவர் திருக்கோயில் அமைந்துள்ள பெரிய நகரத்தின் அமைப்பையும் அழகையும் அருமையாகப் பாடியுள்ளார். காவல் மதில் சூழ்ந்த நகரை இஞ்சிசூழ் தஞ்சையெனப் பலமுறை குறித்துள்ளார். இராசராசனைக் கண்டு பணிந்து திறைகொடுக்க வருவோரின் நெருக்கத்தையுடைய நகரில் பெரியமாடங்கள் உண்டென்பர். மாளிகையில் மாதர் இரவு பகலாக யாழ்மீட்டு இராசராசேசுவரத்து இறைவனைத் துதிப்பர் என்பர். நகரில் மாளிகைகளைச்சூழக் குளங்களில் செங்கழுநீர்ப்பூ பரந்தளவில் வாசனை கமழும் என்பர். அப்பொய்கைகளில் மகளிர் கூட்டம் நீராடுவதால் சந்தனம் சேறாகக் காணப்படும் என்பர். மயிலனைய சாயலுடைய மகளிர் நாடகமாடும் சாலைகள், நடனமாடும் சாலைகள் பலவுள என்பர். இருள் மயமான நந்தவனங்கள் உள்ள தஞ்சைமாநகரம் என்பர்.

## கல்வெட்டுகள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள்

பல்லவர்களுக்குப் பின் வீறுகொண்டெழுந்த விசயாலயன் முதலாய சோழப் பேரரசர்களின் வரலாறு நாநூறுண்டுகள் நிலவியதோடு, கோதாவரி ஆற்றின் வடபாகம் முதல் தெற்கில் இலங்கைவரை தொட்டிருந்தது. இவ் வரலாற்றுப்பெருமை பிறநாட்டார் குறிப்புக்களாலும், தமிழ்நாட்டு இலக்கியங்கள், சின்னங்கள் காசுகளாலும் அறியக்கிடக்கிறது. இவற்றின் வேறாய்க் கல்வெட்டுக்கள் வரலாறு கூறும் சாசனங்களாயிருக்கின்றன. இன்னும் இராசராசன் 985ஆம் ஆண்டில் அரியணையேறிய காலம் முதல் அவன் பெருமையையும் வரலாற்றையும் எடுத்துக்கூறுவதில் மெய்க்கீர்த்தி என்னும் செப்பேடு சிறப்பிடம் பெறுகின்றது. மெய்க்கீர்த்தி இராசராசன் வரலாறு கூறும் புதியமுறை. சோழர்கள் காலம் கற்கோயில்கள் மிகுதியாய்த் தோன்றியகாலம் அக்கோயிற் சுவர்களில் செப்பேடுகள் பொருத்தப்பெற்று அழியா நிலைபெற்றிருந்தன. இராசராசன் புகழ்பேசும் 21 செப்புப்பட்டயங்கள் லீடன் என்னும் தொகுப்பில் அமைந்தவை. அவன் மைந்தன் இராசேந்திரன் புகழ்பாடும் 31 செப்பேடுகள் ஆனைமங்கலத் தொகுதி எனப் பெயர்பெறும். ஆனைமங்கலச் செப்பேடுகள் வரலாற்றுப் பெட்டகமாயுள்ளன. இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடு இராசராசன் பெருமையையும் கூறும்.

## இராசராசன் அனுமதிபெற்ற அளவைகள்

இராசராசன் காலத்தில் நெல் முதலிய தானியங்களை அளப்பதற்கு அங்கீகாரம் பெற்ற முகத்தல் அளவைகள் திருக்கோயிலில் இருந்த ஆடவல்லான் என்னும் சிவப் பெயர் பெற்ற மரக்கால் ஒன்று. வெளியுலகில் இராசகேசரி என்றும், அருண்மொழித்தேவன் என்றும் இரு மரக்கால்கள் இருந்தன. இவை மூன்றும் ஒரே அளவையுள்ளன வாகும் என்பர்.

அக்காலத்தில் செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, காடி, கலம் முதலியன முகத்தல் அளவைகள். இவற்றுள் கலம்ஜ எனவும், குறுணிங எனவும், தூணித எனவும் குறிக்கப்பட்டுள்ளன.

இனி நிறுத்தலளவையில் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி, மா, பலம் முதலியன வழக்கில் இருந்தன. அக்காலத்துப் பொன் நாணகங்கள் வழக்கிலிருந்தன. பொன்னை நிறுத்த தராசு ஆடவல்லான், அது குடிஞைக்கல் எனவும் முதலில் வழங்கியதுண்டு. இரத்தினங்களை நிறுத்தற்கு தட்சிண மேரு விடங்கன் என்பது நிறைகல். முழம், சாண், விரல், தோரை முதலியன நீட்டலளவைப் பகுதிகள்.

## அக்காலத்து அணிகள், அணிகலன்கள்

| | | |
|---|---|---|
| திருமகுடம் | — | தலையிற் சூடுவது |
| வாளி | — | காதணி |
| உழுத்து | — | கழுத்தணி |
| திருவாணி | — | கழுத்தணி |
| வாகுவலயம் | — | தோளில் அணிவது |
| சந்தம் | — | மார்பணி |
| திருக்கைப்பொட்டு | — | கையணி |
| சூடகம் | — | கையணி |
| திரள்மணிவடம் | — | கழுத்தணி |
| வீரப்பட்டம் | — | நெற்றியணி |
| திருக்குதம்பைத்தகடு | — | காதணி |
| பட்டைக்காறை | — | நெற்றியணி |

### அணிகள் செய்வதற்குப் பயன்பட்டவை

பொன், வைரம், மாணிக்கம், முத்து

### வைரங்களின் வகைகள்

மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்டதாரை சப்படி.

### மாணிக்க வகைகள்

களகளம், குணவியன், கோமளம், நீலகந்தி, தளம்.

### முத்தின் வகைகள்

வட்டம், அனுவட்டம், ஒப்பு முத்து, குறுமுத்து, நிமபொளம், பயிட்டம், பழமுத்து, இப்பிபற்று, அராவின, குளிர்ந்தநீர், சிவந்தநீர்.

### காலக்கணிப்பு

ஆண்டு, திங்கள், கிழமை, நாள், திதி, பிறை, விண்மீன் என்பன காலக்கணிப்பில் குறிக்கப்பட்டிருந்தன. இன்னும் தியதி என்னும் குறிப்பும் வழக்கில் இருந்தது.

''அன்பினுடன் சகாத்தமாயிரத்து முந்நூற்றறுபத்தெட்டதன் மேல்'' எனச் சாலிவாகன சகாப்த ஆண்டு குறிக்கப்பட்டது. ''கலியுக நாலாயிரத்தைந்நூற்றைம்பத்தெட்டின்மேல்'' எனக் கலியுக ஆண்டு குறிக்கப்பட்டது.

## திணைக்களத்தார்? வாரியப் பெருமக்கள்

ஆட்சிப்பொறுப்பைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பெருமக்களிடம் ஒப்படைத்த முறையில் வாரியங்கள் உண்டாயின. அவை தோட்டவாரியம், ஏரிவாரியம், கழநி வாரியம், பஞ்சவார வாரியம், கணக்குவாரியம் தடிவழி வாரியம் முதலாக நிலவின. அவை திணைக்களங்கள் என இலங்கையர் வழக்கில் வந்துள்ளனவாகும்.

## சில வழக்காறுகள்

அக்காலத்து ஆட்சிமுறையில் சில வழக்காறுகள் நிலவிவந்தன. அரசன் தனது கட்டளைகள், அறிவிப்புக்களை அரண்மனையிலிருந்தவாறே அறிவிப்பன். அவற்றை எழுதுபவர் திருமந்திர ஓலை. திருமந்திர ஓலையை ஊரவர் சபையில் படிப்பர். அது எங்கும் இராசகட்டளை என அறிவிக்கப்படும். அரசகட்டளை அரசனின் ஆணைப்பொறி என்னும் முத்திரையிடப்பட்டு வெளிவரும். அது ''பிரசாதம் செய்யப்பட்டுவந்த திருமுகப்படி'' என வழங்கும்.

வயல்கள் தோறும் அறுவடைக்குப்பின் தர்மப்பணிகளுக்கு வழங்கும் முதற்படியின் பெயர் மீசு. அது களநெல் நெற்களஞ்சியங்களைக் காப்பவர் கொட்டர். நெற்பயிரைக் காப்போர் கூழரி. சூட்டு நெல் காப்போர் உழமைச்சூடு.

பழையகாலத்து மங்கலகரமான வாய்மொழிகள் வாழ்த்துரைகள் பல மரபுவழி வந்து, சேக்கிழாரின் பெரிய புராணத்தை அலங்கரிக்கின்றன. நன்மைபெருகுக, மலிவளஞ்சுரக்க, கோன்முறை அரசுசெய்க. குறைவிலாது உயிர்கள் வாழ்க, சைவநீதி விளங்குக, சிவனடியார் திருக்கூட்டம் காக்க என்பனவும் பிறவும் சுயமஸ்து, ஸ்வஸ்திஸ்ரீ பன்மாஹேஸ்வரரக்ஷை என்றெல்லாம் வந்துள்ளன.

குடிநீர் வழங்கும் முறையில் இன்று நாகரிகமுறையில் நகரங்களுக்கு நன்னீர்க்குழாய்கள் மூலம் கிடைக்கின்றன. இதற்கு நவீன பொறியியலாளரின் மூளை வேலைசெய்தது. பழைய நிபுணர் மண்ணுலான பெரிய குழாய்களை ஆழமாகப் புதைத்து, நகரத்துக் கிணறுகளுக்கே கங்கை என்னும் புனிதநீரைப் பாய்ச்சினர். ''தீர்த்தம் என்பது சிவகங்கையே'' என வழங்கும்வகையில் அமைந்த பெரிய தேக்கம் சுத்தமான குடிநீர்.

## பொன் நாணகங்கள்

இராசராசன் காலத்தில் பொற்காசுகள் வழங்கியமை வரலாற்றுப்பெருமை பெற்றதாகும். இராசராசன் காசுகள் தனிப்பெருமை பெற்றனவாகும். அவை சிறப்பானவை சித்திரமயமானவை. அவற்றில் புலி. இணைக்கயல், வில் வரையப்பட்டிருந்தன. மூவேந்தர்களின் இலச்சினைகளும் அவற்றிற் பொறிக்கப்பட்டிருந்தமை அவன் முந்நாடுகளிலும் அதிகாரம் பெற்றிருந்தவன் என்பதைக் குறித்ததாகும். முந்நாட்டு இலச்சினைகளுக்குக்கீழ் ஸ்ரீ ராஜ ராஜ சோழ என்னும் எழுத்தும் இருந்தது என்பர்.

★ தென்னிந்திய வரலாற்றில் கோயிலுக்கே முதலிடம் ★

இராசராசன் காசு என்பதைவிட இராசராசன் மாடை எனவும் ஒன்று வழங்கியதாம். மாடை என்பது ஒரு கழஞ்சு நிறையுள்ளதாம். அது ஒன்பதரை மாற்றுடையதாம். ஒரு கழஞ்சு அண்மையில் வெள்ளைக்காரன் வெளியிட்ட பவுண் என்பதின் நான்கு நாணகங்களின் நிறையாகும்.

சோழநாட்டில் அக்காலத்தில் ஈழக்காசு என்னும் பொற்காசும் வழக்கிலிருந்தது. அது அரைக்கழஞ்சு நிறையுள்ளது. அதில் மனிதன் நின்ற கோலமும், இருந்த கோலமும் மாறிமாறித் தீட்டப்பட்டிருந்தன.

ஈழக்காசு தமிழ்நாட்டில் பெருவழக்கில் இருந்தது. அதில் ஒரு காசுக்கு ஒரு மாத காலத்துக்கு வட்டி ¼ புத்தக்கம் என்ப. பதினைந்து ஈழக்காசுக்கு ஒரு வருட வட்டி 45 புத்தக்கம். இராசராசன் காலத்தில் வழக்கிலிருந்த ஒருவகைக் காசின் பெயர் அக்கம். அக்கம் என்பது என்ன வாயிருக்கலாம் என ஆராய்கிறார்கள். அஃது அக்கன் ஆயின் அது இராசராசனின் அருமைத் தமக்கையார் குந்தவையைக் குறிக்கும் என்போம். அவன் தன் அக்காளை அக்கன் என்றே செல்லமாக அழைத்தவன்.

## இராசராசனின் பன்முகப்பணி

பேரரசன் இராசராசசோழன் நாட்டை விசாலித்ததோடு அமையாது, நல்ல முறையிற் பெரிய கோயில்களை அமைத்து அரன்பணி செய்ததோடு, சிறந்த முறையில் சமூகப்பணியும், தமிழ்ப்பணியும் இசை நாடகப் பணியும், வடமொழிப் பணியும், புறச்சமயப் பணியும், மருத்துவப் பணியும், நல்வாழ்வுப் பணியும் செய்தவன்.

நகரமைப்பு, வீடமைப்பு, குடிநீர் விநியோகம், சேரி திருத்துதல் முதலிய பணிகளை நல்ல முறையிற் செய்தவன். நாட்டை அளந்து, அளவை நிறுவை முதலிய வற்றை நிரைப்படுத்தி, பொன் நாணகங்கள் வெளியிட்டு, இன்னும் இன்றைய நவீனமுறையில் முன்னேறிய நாடுகள் வரிசையில் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழப் பேரரசை அமைத்தவன்.

பிராமணக்குருமார், புத்த பிக்குகள், சமணப் பேராசிரியர்கள், சைவக் குருக்கள்மார், வணிகர்கள், விவசாயிகள் முதலான மாந்தர் கூட்டங்களுக்கு வேண்டுவன குறைவறச் செய்து சமாதான சகசீவனமுறை அமைத்தவன்.

வீரத்துக்கு வீரம், கல்விக்குக் கல்வி, செல்வத்துக்குச் செல்வம், பணிக்குப் பணி எவ்வெத்துறைகள் எழுந்தனவோ அவ்வத்துறைகளில் அவன் நேரில் பங்களித்துள்ளான். செய்ந்நன்றி மறவாச் செம்மனம், விட்டுக் கொடுக்கும் விசாலமனம், மன்னித்து மறந்துவிடும் மனோ தர்ம குணம் அவனிடம் களிநடம் புரிந்தன.

தன்னைத் தூக்கி வளர்த்த பெரிய பாட்டி செம்பியன் மாதேவியாரின் உதவியை மறக்காது, அம்மையார் பெற்ற மைந்தன் உத்தம சோழனுக்குத் தன் தந்தை வழியால் வந்த ஆளும் உரிமையை விட்டுக்கொடுத்ததோடு, அவனுக்குக்கீழ் தான் இளவரசனாகப் பதினைந்து ஆண்டுக்காலம் பணிபுரிந்தபோதே பன்முக ஞானத்தையும் பரவலாகப் பயின்றவனுவன்.

சிறந்த இராசதந்திரியுமான இராசராசன் தன் அருமை மகள் குந்தவை என்பாளை வேங்கி நாட்டில் சாளுக்கிய இளவரசனுக்குத் திருமணம் செய்துகொடுத்துப் பகை வரை நண்பர்கள் மாத்திரமல்ல உறவினராக்கியும் கொண்ட மனப்பான்மையினால் பிற்காலத்தில் பெரு நன்மை உண்டாயது.

இராசராசனின் மைந்தன் இராசேந்திரனுக்குப் பின் இவனுடைய மைந்தர்கள் இராசாதிராசன் II (*1018 – 1054*) இராசேந்திரன் II (*1053 – 1063*) வீரராசேந்திரன் II (*1063 – 1070*) ஆகியோர் ஆண்டபின், இராசேந்திரனின் மகள் அம்மங்காதேவி என்பாளின் பேரன் முதலாம் குலோத்துங்கன் என்னும் பெயரில் *1070* முதல் *1120* வரை அரசாண்டான். அம்மங்காதேவியை மணஞ் செய்தவன் முன்சொன்ன சாளுக்கியனுக்கும் குந்தவைக்கும் பிறந்த மைந்தன் சாளுக்கிய இராசராசன்.

## இலங்கையும் இராசராசனும்

வட பாரதத்தையும் தென்கிழக்காசிய நாடுகளையும் சோழத் தமிழர் கைப்பற்றுவதற்கும் கட்டியாள்வதற்கும் தென்னிலங்கையைக் கைப்பற்றுதல் இன்றியமையாதது எனக்கண்டவன் இராசராசசோழன். இதற்கு அத்திவாரமிட்டாற்போல் இராசராசன் வட இலங்கைப் பெரும் பிரதேசத்தை 1001 முதல் 1004 வரை போரிட்டுக் கைப்பற்றித் தலைநகரமாய அநுரதபுரத்தைப் பிடித்து அப்பால் பொலநறுவை வரை சென்றவன், தான் சென்றவிடமெல்லாம் சிவன்கோயில்கள் அமைத்து, அவற்றைச் சூழ வில்வை, கொன்றை மரங்களை நாட்டிப் பெருங்காடுகளாக்கியவன். அவன் செய்த வில்வை கொன்றைக் காடுகள் பொலநறுவையில் 1952 வரை அடர்ந்து அலங்கரித்தன. இராசராசன் ஆண்ட இறுதி ஆண்டான 1014 வரை இலங்கையின் ஐந்து பெரும் ஊர்கள் தஞ்சை இராசராசேசுவரன் கோயிலுக்கு வருவாய் கொடுத்தன. இலங்கையர் ஒரு காலத்தில் இலுப்பைப்பால் திரட்டித் தஞ்சைக் கோயிலின் அமைப்புக்குச் சாந்து இறுகுவதற்கு உதவினர்கள். அவ்வுபயம் அரச கட்டளையுமாகும். சிங்கள மன்னனொருவன் பன்னிரண்டு ஆண்டுகள் தஞ்சையில் சிறையிலிருந்து முதுமை மரணத்தையும் தழுவியவனுவன்.

பொலநறுவையில் அரசு செய்த சோழர் இலங்கையின் தென்பகுதியையும் மலைநாட்டையும் கைப்பற்றிக் கொள்ள முயற்சியெடுத்தனர். சோழர் செய்த போரில் சிங்கள அரசர்கள் இருவர் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். ஒருத்தன் தற்கொலை புரிந்துகொண்டான் என்று இலங்கைச் சரித்திரம் கூறுகிறது.

இராசராசன் இலங்கையில் பொலநறுவையில் அமைத்த பெரிய சிவாலயம் வரலாற்றில் இரண்டாம் தேவாலயம் என வழங்கி இன்றும் அழியாமல் உள்ளது.

★ வடக்கைவிடத் தென்னுடு படிப்பில் உயர்ந்தது ★

அங்கே கோயில் கொண்டுள்ள வானவன் மாதேவி ஈசுர முடையார் மிகவும் உயரமானவர். இத்திருக்கோயில் வானவன் மாதேவி என்னும் அரசியின் பெயரால் அமைந்தது. இவள் சுந்தர சோழனின் மனைவியும் இராச ராசசோழனின் தாயுமானவளாயிருக்கலாம். அன்றேல் இராசராசனின் மனைவியருள் ஒருத்தியாய வானவன் மாதேவியாயிருக்கலாம்.

இக்கோயிலின் கர்ப்பக்கிருகமே இன்று அசையாமல் உள்ளது. ஏனைய மண்டபங்கள் அழிந்துபோயின. அவற் றின் கற்கள் கோயிலைச் சூழப் பரவிக்கிடக்கின்றன. கவிழ்ந்து கிடக்கும் கற்களில் கல்வெட்டுக்கள் இல்லாமற் போகா.

இத்திருக்கோயிலைச் சேர்ந்த எழுந்தருளி மூர்த்தங்க ளான செப்புத்திருமேனிகள் பல இன்று கொழும்பு நூதனசாலையை அழகுபடுத்துகின்றன. அந்த தெய்வ சபையின் நிரையில் ஆடவல்லான் என்னும் நடராசப் பெருமானின் திருவுருவும் ஐரோப்பியர் முதலான உல் லாசப் பிரயாணிகளை உற்றுப்பார்க்க வைக்கிறது. நட ராசப் பெருமானையடுத்து நிற்பவர்கள் வரிசையில் பார்பதியம்மையார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் திரு உருவங்கள் அற்புதக் கோலங்களாயுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவுருவங்கள் சிறிதும் பெரிதுமாக இரண்டு உள்ளன.

அவரின் பெரிய திருவுருவத்தைப் பார்ப்பவர்கள் பெரியபுராணத்தில் வரும் சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்திப்பரவச நிலையை விபரிக்கும் சேக்கிழார் பாடலை நினைக்காமலிரார். ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள எனத்தொடங்கும் பாடல் அத்திருவுருவத்தைக் கண்டு பாடினாற்போல அமைந்துள்ளது.

இலங்கையிற் சோழரின் கோயிற் பணியிலமைந்த கட்டடக்கலை சிங்களவரின் விகாரைகள் தோறும் நிழல் விடுகின்றன. சோழரின் கைவண்ணத்தைச் சிங்களவர் பின்பற்றியதோடு, சோழத் தமிழரைக் கொண்டே தங் கள் அழகிய கட்டடங்களைக் கட்டுவித்தார்கள் என நம்புவதற்கும் நிறைவான அடையாளங்கள் பலவுள்ளன. தமிழர் சகாயம் பெற்ற கட்டடமொன்றும் வரலாற்றில் பெருமைகொண்டது.

சோழரின் பின் 1056 ஆம் ஆண்டில் செல்வாக்குற்ற முதலாம் விஜயபாகு அநுரதபுரத்தில் முடிசூடப் பெற் றும், பொலநறுவையையே தலைநகராகக் கொண்டிருந் தான்.

இலங்கை வரலாற்றை எழுதிய பேராசிரியர்கள், பேறிஞர்கள் பலரும் அதைக் காலம் காலமாகப் பிரித்து எழுதிய முறையில் பொலனறுவைக்காலம் என்ற பகுதியை சோழர் வரலாற்றோடேயே ஆரம்பிக்கிறார்கள். பொலனறுவைக்கால வரலாற்றில் சோழரின் பங்களிப்பு இழையோடியுள்ளது. சோழர் தாக்கியபோது சிங்களவர் தாங்கியவர்களாயே இருந்தார்கள். தாக்கியவர்களின் செல்வாக்கு தாங்கியவர்களின் முன்னேற்றத்திற்கும் முது கெலும்பாயிருந்தது. சோழப்பேரரசில் இலங்கை ஒரு மாகாணமாயமைந்தபோது பொலனறுவை சனநாதபுரம் என வழங்கியது.

இராசராசன் கைப்பற்றிய இலங்கையின் பழைய தலைநகரான அநுரதபுரம் அழியத் தொடங்கியது. பொலனறுவை சனநாதமங்கலம் எனப் பொலியத் தொடங்கியது. ஐம்பது ஆண்டு காலமாகச் சிங்களவர் சோழர் கட்டடக் கலையைப் பின்பற்றியே எதனையும் கட்டினார்கள். இலங்கையின் பெரும்பாகத்தை ஆண்ட சோழர் எங்கும் தமிழ்க் கட்டடக்கலையையே பரப்பினார் கள். சிவாலயங்களைப் பெருமளவில் அமைத்தார்கள்.

சிவாலயங்கள் பெருமளவில் அமைந்தவாறே ஊர் கள்தோறும் சைவப் பாரம்பரியம் சிங்கள மக்களிடம் பரவத் தொடங்கியது. விகாராதிபதிகள் பலர் மண் ணுசை கொண்டு வயல் நிலங்களில் நாட்டஞ்செலுத்து வாராயினர். சைவர்களின் வழிபாட்டிடங்கள் சிங்கள மொழியில் தேவகுலம் எனப் பெருமதிப்புப் பெற்றன. முன்னர் இரண்டாம் சேன என்னும் அரசன் பிராமண ருக்குப் பானை நிறையப் பொன் கொடுத்தமையும் வர லாற்றுண்மையாகும்.

## கோயிலுக்குக் கொடுப்பனவும் அங்கே பெறுவனவும்

கொண்டும் கொடுத்தும் ஈசனுக்கு ஆட்பட்ட இனம் தமிழினம். பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கொடுத்து ஔவையார் சங்கத்தமிழ் உணர்ந்தார். தம்மைக்கொடுத்த மாணிக்கவாசக சுவாமிகள் இறை அனுபவத்தையே பெற்றார். நன்மை செய்யும் சங்கரன் தமக்கும் தந்தருளுவான் என்னும் கருத்தில் நாளும் அடியவர்கள் கோயிலுக்குக் கொடுத்தார்கள், கொண் டார்கள்.

| | கொடுத்தவை | | கொண்டவை |
|---|---|---|---|
| 1. | தைலவகை | — | பக்தி |
| 2. | சூர்ணம் | — | சம்பத்து |
| 3. | பழவகை | — | சன வசீகரம் |
| 4. | பஞ்சாமிர்தம் | — | நீடிய வாழ்வு |
| 5. | பால் | — | சாந்த குணம் |
| 6. | தயிர் | — | திடகாத்திரம் |
| 7. | தேன் | — | இசை வன்மை |
| 8. | நெய் | — | சுகவாழ்வு |
| 9. | சர்க்கரை | — | சாஸ்திரத் தேர்ச்சி |
| 10. | இளநீர் | — | மக்கட்பேறு |
| 11. | விபூதி | — | ஞானம் |
| 12. | சந்தனம் | — | சுவர்க்க போகம் |
| 13. | பஞ்சகவ்வியம் | — | பாவ நிவர்த்தி |
| 14. | பொன் | — | வைராக்கியம் |
| 15. | ஸ்தபனம் | — | யாகப்பயன் |
| 16. | பன்னீர் | — | புகழ் |
| 17. | வஸ்திரம் | — | சம்பாவனை |
| 18. | பூ | — | மகிழ்ச்சி |
| 19. | கற்பூரம் | — | முத்தி |

★ சமயம், கலை அறிவுத்திறன் சாதியை உயர்த்தவல்லன ★

சோழருடைய சைவச் செல்வாக்கு பின்வந்த பராக்கிரம பாகுவை நன்கு உருவாக்கி ஊக்கிவிட்டதும் அவன் தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்தில் பெருமளவில் திருப்பணி வேலைகள் செய்வானுயினன். இலங்கையில் கட்டடங்களின் வாசல் முகப்பில் அமைந்த வெண்ணிற கற்களின் சைவக் கோலங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

தமிழ்நாட்டில் கூத்துவகையில் அகமார்க்கம் என்னும் பகுதியில் தேசி, வடுகு, சிங்களம் என்னும் பிரிவுகள் நிலவின. சிங்களம் இலங்கையிலிருந்து அங்கே போனவர்கள் ஆடிய கூத்து.

## சர்வசிவ பண்டிதரும் இராசராசசோழனும்

இராசராசன், இராசேந்திரன் ஆகிய பேரரசர்கள் காலத்தில் பெருமதிப்புப் பெற்றுச் சிவப்பணி செய்துவந்த பெரியார் சர்வசிவ பண்டிதர் என்னும் சிவாசாரியாராவர். பேரறிவாளரான பிராமணர்கள் பலர் இருப்பவும் தஞ்சைப் பெருங்கோயில் குருக்களாகவும், பேரரசின் சமயத் துறை ஆலோசகராகவும், ஆசாரிய குருதேவராயும் இருந்தவர் சைவக் குருவேயாவர். மூவகைத் திட்சைகளையும் முறையாகப் பெற்றுச் சிவமூலமந்திரத்தை தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், முத்தி பஞ்சாக்கரம் என்னும் முறையிலிருந்து முறையாக உச்சரித்துச் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை உலகறியச் சாதனைமூலம் விளக்கிய சர்வசிவ பண்டிதருக்குப் பெருமளவில் அன்பளிப்புக்கள் கிடைத்தன. இராசேந்திரசோழன் ஆண்டு தோறும் 2000 கலம் நெல் உபகரிக்குமாறு கட்டளையிட்டிருந்தான் என்பதை அறியும்போது, சைவக்குருக்கள் பெற்றிருந்த சிறப்புத் தானத்தின் உச்சக்கட்டத்தை என்னென்பது. சிவசிவ என்போம். சர்வசிவ பண்டிதர் சைவப்பெருங் கோயிலில் பூசைசெய்த அருமையைக் கண்குளிரக்கண்ட குந்தவைப் பிராட்டியார், அத்திருக்கோயிலுக்குப் பல திருவுருவங்கள் எழுந்தருளி மூர்த்தமாகச் செய்தளித்ததோடு, பலவித பொன்னுபரணங்களும் கொடுத்தார் என்பது சாசன வாசகம். அவர் இறைவி உமாபரமேஸ்வரியாருக்கு மகுடம், வாளி, உழுத்து, மாலை, வாகுவலயம், சந்தம், கைப்பொட்டு, சூடகம் என்பனவற்றைப் பொன்கொண்டு செய்வித்து; முத்து, மாணிக்கம், வைரம் முதலியன பதிப்பித்தார் என்பதும் செய்தியாகும். அரஹர மஹாதேவா.

## சோழரும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டும்,

சைவத் திருமுறைகள் பன்னிரண்டுக்குள் ஒன்பதாம் திருமுறையாக அமைந்தவை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பதிகங்களாகும். திருவிசைப்பா பாடியருளிய பெரியவர்களுள் கண்டராதித்த சோழரும் ஒருவர். இராசராசன் தேடிப்பிடித்த பேரறிவாளரும் பெரும் புலவரும் பெருச்சித்தருமான கருவூர்த்தேவரும் ஒருவர். கருவூர்த்தேவர் பத்துப் பதிகங்கள் பாடிச் சாதனை செய்தருளியதோடு, இராசராசனின் தஞ்சைப் பெருங் கோயிலையும் பாடியுள்ளார். சோழர்களுள் திருவிசைப்பா காலத்தவர் எனப் புகழ்பெற்ற மன்னர்கள் கண்டராதித்தர், அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன், இராசராசசோழன், கங்கைகொண்ட இராசேந்திர சோழன் என்பவர்களாவர். திருவிசைப்பா பாடியவர்களைத் தில்லைச் சிவனுரிடம் ஆற்றுப்படுத்தியவர் கண்டராதித்தரின் தேவியாராய செம்பியன் மாதேவியாராவர். ஆறு பெரியவர்கள் தில்லையைப் பாடியவராவர். திருவிசைப்பாவில் பஞ்சமப்பண் மிகுதியாகப் பயின்றுவருகின்றது. அன்றி முன்னர் என்றும் பயிலாத சாரளபாணி என்னும் பண் திருவிசைப்பாவில் முதன்முதலாக வந்துள்ளது. திருப்பல்லாண்டு தென்கிழக்காசிய நாடுகளில் தாய்லாந்து என்னும் சையாம் நாட்டில் மன்னர்கள் முடிசூடியபோது வாழ்த்தும் பாடல்களாக அண்மைக் காலம் வரை படிக்கப்பெற்று வந்தது.

## இராசராசனின் பன்முகப்பணி

பேரரசன் இராசராச சோழன் நாட்டை விசாலித்ததோடு அமையாது, சிறந்த முறையிற் சமயப்பணி புரிவதற்குப் பெரிய சிவாலயங்களைக் கட்டி அவற்றுக்கு வேண்டுவன கொடுத்தமையோடு, வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய மறுசமயங்களுக்கும் சிறப்புச்செய்தவன். அவனுடைய சமயப்பணி பூரணமானது முழுமனத்தோடு செய்யப்பெற்றது.

இராசராசனின் சமூகப்பணி சர்வோதயமானது. அவன் கிராமோதயம், தேசோதயம் என்பவற்றைச் செய்ததோடு தமிழ்மொழித் தொண்டு, வடமொழித் தொண்டு, கலைப்பணி, நாடகவளர்ச்சி ஆகியவற்றுக்கும் வழிவகுத்தவன்.

தமிழக வரலாற்றிலே அவன் தனி இடம் வகித்தவன், அது முதலிடம் எனவும் தலைவணங்கவேண்டியது. அவனுடைய சிற்பக்கலைப்பணியை அவன் காலத்துக் கைதேர்ந்த சிற்பியரின் கைவண்ணத்தால் தமிழ் நாட்டிலே அன்றி எங்கள் ஈழநாட்டுப் பொலனறுவையிலும் காணலாம்.

அவன் காலத்தில் எழுந்த தமிழிலக்கியத் தொகுதி பெரியது. ஒன்பதாம் சைவத் திருமுறையிலும் பதினொராந் திருமுறையிலும் சில பகுதிகள் அவன் காலத்தில் எழுந்தவை. கருவூர்த்தேவர், நக்கீரதேவர், நம்பியாண்டார் நம்பி முதலானோர் திருமுறைச் செல்வராவர். கருவூர்த்தேவர் இராசராசனுக்குப் பின்னரும் ஒரு பதிகம் பாடியருளியபோதிலும் அவர் பத்துப் பதிகங்கள் பாடியுள்ளார். அங்ஙனமே நக்கீரதேவரும் பத்துப் பதிகங்கள், நம்பியாண்டார் நம்பியும் பத்துப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

இன்னும் கல்லாடதேவர், பரணதேவர், பட்டினத்தார் முதலானோர்காலமும் பத்தாம் நூற்றாண்டு என்பர். எனவே இவர்களுள் சிலர் இராசராசன் காலத்தவராயும் இருக்கலாம்.

இனி வைணவ இலக்கிய கர்த்தாக்களுள் உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, குருகை காவலப்பன், ஈசுவரமுனி, ஆளவந்தார் முதலானோர் பத்தாம் நூற்

ரூண்டினராவர். இவர்களுள் ஆளவந்தார் இராசராசன் காலத்தில் பெருந்தொண்டு செய்தவர்.

சமணர் பலர் தஞ்சையில் தஞ்சமென வாழ்ந்தவர்கள். அவர்கள் பெரிய இலக்கிய இலக்கண கர்த்தாக்கள். அவர்கள் இசை நாடகங்களை காமம் பயப்பன வென ஒதுக்கியவராயினும், இயற்றமிழை நன்கு வளர்த்தவர்கள். அவர்களின் சூளாமணி என்னும் காப்பியம் பெரும் புகழ்பெற்றது.

தமிழிலக்கிய வளர்ச்சியில் இரரசராசன் ஆரம்பித்த மெய்க்கீர்த்தி 996 ஆம் ஆண்டில் செந்தமிழ் மணக்கத் தொடங்கியது. இது முதலில் சிறியதாகத் தொடங்கி, ஆண்டுதோறும் வளர்ந்து, 250 அடி நீளத்தையும் தொட்டது. இராசராசன் புகழ்பேசும் மெய்க்கீர்த்தி இலக்கியத்தோடு, ஏராளமான தனித்தமிழ்ப் பாடல்களும் எழுந்தன. இத்தனிப் பாடல்களின் பொருளாளம் சொற்சுவை கருதிப் பிற்காலத்து உரையாசிரியர்கள் இவற்றைத் தாராளமாகக் கையாண்டு கருத்துக்களை விளக்கியுள்ளார்கள்.

இராசராசன் காலத்தில் எழுந்த துறைகளில் சோதிடமும் ஒன்று. காலக்கணிப்பில் சோழராசன் காலத்தவர் பெரிதும் ஈடுபட்டுச் சில நூல்கள் செய்துள்ளார்கள். இத்துறையில் சகுன சாத்திரமும், ஆருட சாத்திரமும் இடம்பெற்றுள்ளன.

சாசனப் பாடல்கள் வரிசையில் 996 ஆம் ஆண்டையடுத்துப் பல பாடல்கள் வரலாற்றுத்துறையை விளக்குகின்றன. இத்தகைய பாடல்களுள் சில இராசராசன் கன்னியாகுமரியில் இராசராசேச்சுரம் கட்டியபோது, அவனுடைய மந்திரி மங்கலக்கால் ஐயனம்பி தண்ணீர்ப் பந்தல் அமைத்ததைப் பற்றியவையாகும்.

"தெண்டிரைநீர்த் தென்குமரி மாநகர்த்தண் ணீர்ப்பந்தல்
எண்டிசையும் ஏத்த இனிதமைத்தான் – விண்டயரும்
ஐந்தெரிய லான்ஐய னம்பி அடல்வலவன்
மந்திரிதென் மங்கலக்கால் மன் "

"மானமிக்க வேலையன் மங்கலக்கால் தென்குமரி
தானமைத்த பந்தலில்தண் ணீரட்டத் – தேனிரைத்த
மைத்தங்கு சோலை மணற்குடியி லேவைத்தான்
நித்தம் பதினுழி நெல்."

## இராசராசனின் பின்னோர்

விசயாலயன் ஆரம்பித்த சோழவரசை அவன் வழி வந்த இராசராசன் அகலித்துபேரரசாக்கித் தன்மைந்தன் இராசேந்திரனிடம் ஒப்படைத்தான். இராசராசன் 1001ஆம் ஆண்டிலும் 1002 ஆம்ஆண்டிலும் தன்நாட்டை உலகளந்தகோல் என்னும் நீட்டல் அளவையால் அளந்து கணக்கிட்டான் என்பர்.

## இராசேந்திரன்

இராசராசன் மைந்தன் இராசேந்திரன் 1012 ஆம் ஆண்டு முதல் இளவரசாகி அரசகாரியம் பழகிப் பெரும் போர்களிலும் பங்குபற்றியவன். இவனைப் "பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" எனக் கல்வெட்டுக்கள் புகழ்கின்றன. அவன் மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளிற் பிறந்தவன். இவனைத் தந்தையார் மதுராந்தகன் எனச் செல்லமாக அழைத்து மகிழ்ந்தனன். இவன் மகுடம் புனைந்தபோது பெற்ற பெயர் இராசேந்திரன்.

இராசேந்திரன் 1014 முதல் 1044 வரை முப்பதாண்டுக்காலம் அரசாண்டவன். இவன் தன் மைந்தன் இராசாதிராசன் என்பானை 1018ஆம் ஆண்டில் இளவரசனுக்கினுன். இராசேந்திரன் பெற்ற பெரு வெற்றிகளுள் கங்கை, கடாரம் தொண்டமை தலையாயவை.

இராசேந்திரன் பெற்ற பெருவெற்றிகளுள் எங்கள் நாட்டை முற்றுகப் பிடித்தமையும் ஒன்று. முன்னர் பாண்டியர் இலங்கையரசனிடம் பாதுகாப்பாக வைத்த சுந்தரமுடியையும் இந்திரன் ஆரத்தையும் அவனின் தேவியரின் அழகிய முடியையும் அவன் கைப்பற்றினுன் என்பது கல்வெட்டு.

"பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழ மண்டலம் முழுவதும்"

இராசேந்திரன் கங்கைப் பிரதேசத்தைப் பிடித்து வங்காளம் எங்கும் தமிழ் அறிஞர்களைக் குடியேற்றியமை அங்கே இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு வழி அமைத்தது. அங்கே தமிழர் நாகரிகம் பரவியது. வங்காளிகள் படிப் பார்வம் உள்ளவராஞர்கள். அக்காலத்தில் சாமந்தசேனன் என்னும் பெயர்பெற்ற தமிழ்வீரன் அரசனுயும் புகழ்பெற்றுன்.

தமிழரைக் கங்கைக்கரையிற் குடியேற்றிய இராசேந்திரன், வடக்கிலிருந்து சைவர்களை அழைத்துவந்து காஞ்சி முதலான தமிழ் நகரங்களிற் குடியேற்றினுன். அப்பால் அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்திக் கடாரத்து அரசர்களை வென்றுன். அப்பால் தென்கிழக்காசிய நாடுகள் மலேயா தீபகற்பம், சுமாத்திரா தீவு முதலிய பகுதிகளையும் கொண்டான். அந்தமான் நிக்கோபாத் தீவுகளை இந்தியநாடாக்கினுன்.

இராசேந்திரன் கங்கைகொண்ட பெருமையை நிலைவுறுத்தக் கங்கைகொண்ட சோழப்பெருநகரம் அமைத்து அங்கே கலைப்பொலிவுடன் சிவன்கோயிலையும் கட்டினுன். அதனைக் கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடிச் சிறப்பித்தார். இராசேந்திரன் நினைவாகச் சோழகங்கம் என்னும் பெரிய ஏரி அவனுல் வெட்டப்பெற்றது.

இராசேந்திரன் சிவபக்தன், சைவப்பிரியன். அவன் சர்வசிவ பண்டிதரைப் பெரிதும் அபிமானித்து வணங்கி ஆதரவளித்தவன், இன்னும் லகுளீச பண்டிதர் என்னும் காளாமுக சைவப்பெரியாரையும் ஆதரித்தான் என்பர். வடக்கே ஒறிசா மாநிலம் முழுவதும், தெற்கில் இலங்கை முழுவதும் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

★ தமிழில் எழுத்து, சொல், பொருள் வளமானவை ★

## இராசாதிராசன்

இராசேந்திரனின் மைந்தர்களுள் இராசாதிராசன், இராசேந்திரன், வீரராசேந்திரன் ஒருவர்பின் ஒருவராய் அரசாண்டார்கள். இராசாதிராசன் 1018இல் இளவரசனானவன். அவன் 1044 முதல் 1054 வரை அரசுசெய்தவன். சிறந்தவீரன். இலங்கையர் செய்த புரட்சியையும் சாளுக்கியர், பாண்டியர் செய்த புரட்சியையும் அடக்கியவன்.

## இரண்டாம் இராசேந்திரன்

இவன்தன் அண்ணனின் கீழ் 1051இல் இளவரசனாயிருந்து, சாளுக்கியரை அடக்கியவன். கொப்பத்துப் போர்க்களத்தில் பெருமை மலர முடிசூட்டப்பெற்றவன். "ஒரு களிற்றின் மேல் வருகளிற்றை யொத்து உலகுயக் கொளப்பொருது கொப்பையில் பொருகளத்திலே முடி கவித்தவன்" என்று பிற்காலத்துக் கலிங்கத்துப்பரணி இவன் வீரத்தைப் பாடுகிறது. இவன் மகள் மதுராந்தகி என்பாளை அம்மங்கதேவியின் பேரனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அந்த மணமகன் இராசேந்திரன் என்பானே பிற்காலத்தில் முதலாம் குலோத்துங்கன் என்னும் பெயரில் 1070இல் முடிசூடினான்.

## வீரராசேந்திரன்

ஆவணி மாதத்து ஆயிலிய நாளில் பிறந்த இவன் பெரிய வீரன். இவன் 1063ல் அரசனாகி 1064இல் ஆகவமல்லன் என்னும் சாளுக்கிய வீரனை ஐந்துமுறை வென்றவன். "ஆகவமல்லனை ஐம்மடிவெந்கண்டு" என்பது கல்வெட்டு. இவன் புரட்சிசெய்த அயல்நாடுகளின் வீரரை அடக்கியவண்ணம் இலங்கையில் விஜயபாகுவையும் வென்று அடிப்படுத்தினான். "கன்னட தேசம் கைவிடத் துரத்தி தன்னடி யடைந்த" என்னும் அடிகளால் இவன் அங்கேயும் பெருவெற்றி பெற்றவன் என்பது உறுதி. இவன் 1070 வரை அரசாண்டவன்.

## அதிராசேந்திரன்

வீரராசேந்திரனின் மைந்தன் 1067 அளவில் இளவரசனாய் முடிசூடி தந்தையின்பின் சிலமாதங்கள் அரசனாயிருந்தவன். இவனுக்கு ஏதோ பெரியநோய் உண்டானது என்றும் அது நீங்குவதற்காக அன்பர்கள் திருக்கோயிலில் தேவாரம் பாடி வணங்கினர் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் பிள்ளைப்பேறில்லாது இறந்ததும் அரசுரிமை முதலாம் குலோத்துங்கனுக்காயது. இவன் தந்தைவழியால் சாளுக்கிய மரபையும், தாய்வழியால் சோழமரபையும் சேர்ந்தவன், இளமையில் இவன் பெயர் இராசேந்திரன். இவன் 1060இல் வேங்கிநாட்டில் விஷ்ணுவர்த்தனன் என்னும் பெயரில் அரசனாகி ஆண்டவன். பின்னர் 1070இல் சோழமன்னனாய் முதற்குலோத்துங்கன் என்னும் பெயரில் அரசுரிமை பெற்றவன். குலோத்துங்கன் பெயரில் மூவர் பெருஞ் சிவபக்தர், பேரரசர்.

இவ்வரலாற்று வம்சாவழிமாற்றம் 533 ஆண்டுகளின் பின் ரியூடர் வம்சத்தின்பின் 1603இல் ஸ்ருவாட் வம்சத்தில் ஸ்கொத்துலாந்தின் ஆறும் யேம்ஸ், இங்கிலாந்தின் முதலாம் யேம்ஸ் ஆனவரலாற்றுக்கு முந்தியது முன்மாதிரியானது.

(முற்றொடர்)

## இரண்டுஞ் சரி

| | | | |
|---|---|---|---|
| 55. | விலாசம், விளாசம் | = | மேல்விலாசம் |
| 56. | விலாலம், விலானம் | = | பூனை |
| 57. | அசரை, அசறை | = | ஒரு மீன் |
| 58. | அர்ப்புதம், அற்புதம் | = | பத்துக்கோடி |
| 59. | கிராக்கி, கிறுக்கி | = | அரியவிலை |
| 60. | சிரிசு, சிறிசு | = | குற்றுவாள் |
| 61. | குருணி, குறுணி | = | ஓரளவு தானியம் |
| 62, | சாரணை, சாறணை | = | ஒரு பூடு |
| 63. | சிதரல், சிதறல் | = | சிந்தல் |
| 64. | தரிசு, தறிசு | = | கரம்பன் நிலம் |
| 65. | கருப்பு, கறுப்பு | = | ஒருகல் |
| 66. | தருவாய், தறுவாய் | = | தருணம் |
| 67. | தரை, தறை | = | நிலம் |
| 68. | திரம், திறம் | = | உறுதி |
| 69. | திராங்கு, திறங்கு | = | தாழ்ப்பாள் |
| 70. | திராணி, திறாணி | = | பலம் |
| 71. | பிரிவினை, பிறிவினை | = | வேறுபாடு |
| 72. | முரித்தல், முறித்தல் | = | ஒடித்தல் |
| 73. | வரட்சி, வறட்சி | = | காய்தல் |
| 74. | விருவிருப்பு, விறுவிறுப்பு | = | விரைவு |

## மாம்பழம்

யாழ்ப்பாணத்தவருக்குப் பலநோக்கில் பயன்தரும் பலவித மாமரங்கள் உறுதுணையானவை. வாழ்வழிக்கும் மாவினங்களை உற்பத்தி செய்வதில் மறுமலர்ச்சிப் பாதை அமைப்போம். ஒரு மரத்தில் பலவினங்களை ஒட்டுவதில் நிபுணர்கள் எங்களிடம் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் நிபுணர் புத்தம் புதிய இனங்களையே கண்டுபிடிக்கிறார். நாங்கள் யாழினி முதலிய பெயர்களில் கலப்பினங்கள் காண முயல்வதோடு, இன்று கிடைக்கும் பழங்களை மூலப்பொருளாகக்கொண்டு உற்பத்தி வளத்தை விரிவு படுத்தவேண்டும்.


### மாணவமணிகளுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி

உங்கள் சீருடைகளை வெண்மையாக்கும் எங்கள் மில்க்வைற் நீலக்கட்டி மேல் உறைகள் 200 சேர்த்துத் தந்தால் உங்களுக்கு நீலநிறம் பொருந்திய தடித்த துணியிலான புத்தகப்பை (School Bag) ஒன்று தருவோம்.

**மில்க்வைற் தொழிலகம்**

தபால் பெட்டி – 77.

யாழ்ப்பாணம்.

# இராசராசனின் முன்னோரும் பின்னோரும்

விஜயாலயன் 845 — 881

ஆதித்தன் 871 — 907

பராந்தகன் I 907 — 953    கன்னரதேவன்

இராசாதித்தன்    கண்டராதித்தர் 950 — 957    அரிஞ்சயன் 957

\+ செம்பியன்மாதேவி

உத்தம சோழன் 970 — 985

சுந்தரசோழன் என்னும் பராந்தகன் II 957 — 970

ஆதித்தகரிகாலன்    குந்தவை I    இராசராசன் 985 — 1014

இராசேந்திரன் I 1012    குந்தவை II + சாளுக்கிய விக்கிரமாதித்தன்

இராசாதிராசன் II 1018 — 1054    இராசேந்திரன் II 1053 — 1063    இராசமகேந்திரன்    வீரராசேந்திரன் 1063 — 1070    அம்மங்காதேவி

குந்தவை II + விமலாதித்தன்

சாளுக்கிய இராசராசன் + அம்மங்காதேவி

வீரராசேந்திரன் + மதுராந்தகி (இரண்டாம் இராசேந்திரன் மகள்)

வீரரா சேந்திரன் = முதற் குலோத்துங்கன் 1070 — 1120

விக்கிரமசோழன் 1118 — 1133

குலோத்துங்கன் II 1138 — 1150    ஆளுடை நாச்சியார்


இராசராசன் II 1146 — 1163    நெறியுடைப் பெருமாள் (ஆண்)

குலோத்துங்கன் III 1178 — 1218    இராசாதிராசன் II 1163 — 1178

இராசராசன் III 1216 — 1256

இராசேந்திரன் III 1246 — 1279

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-7-85.



திங்கள்தோறும் தமது தாபனத்தின் பெயரால்

## மில்க்வைற் செய்தி

என்னும் செந்தமிழ் ஏட்டினை வெளியிடுவதோடு, காலந்தோறும் சைவம், தமிழ், சமூகம், விவசாயம், பனையபிவிருத்தி, சுகாதாரம், யோகாசனம், பெரியவர்கள் வரலாறு சம்பந்தமான நூல்களையும் வேறு பிரசுரங்களையும் வெளியிடும் தொழிலதிபர்

சிவதர்ம வள்ளல், சமாதான நீதவான்

க. கனகராசா அவர்களின் பன்முகப் பணி வாழ்க!

சமூகப்பணியில் தோய்ந்த அவர் பரிசளிப்புவிழாவொன்றில் குதூகலமாகக் காட்சி கொடுக்கிறுர்.

இத்தகைய பணிகள் வளர்வதற்கு அவர் உங்களிடம் விரும்பி விண்ணப்பிப்பது மில்க்வைற் தயாரிப்புகளுக்கு உங்கள் அமோக ஆதரவேயாகும். உங்கள் ஆதரவுக்குத் தக்கதாக அன்றி மேலாக அவர் வெளியீடுகள், பரிசுப் பொருள்கள், உபயோகமுள்ள துவாய், கட்டில் விரிப்பு, மாணவர்களின் பள்ளிப்பை, கொப்பி முதலியனவும் மில்க்வைற் மேலுறைகளுக்கு வழங்குகின்றுர்.

**மில்க்வைற் மேலுறைகளைச் சேகரியுங்கள்**

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002